Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை - 06 | 21-11-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -277




# அப்பாவி இளைஞர்கள் கொலையைக் கண்டித்து

# யாழ். குடாநாடு முழுவதும் பூரண ஹர்த்தால்

## குடாநாடு முற்றாகச் செயலிழந்தது

**வல்வெட்டித்துறையில் அப்பாவி இளைஞர்கள் இருவர் கொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து நேற்று யாழ்.குடாநாடு முழுவதும் பூரணஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டதனால் குடாநாடு முற்றாகச் செயலிழந் தது. யாழ்.குடாநாட்டிலுள்ள வர்த்தக நிலையங்கள், பொது நிறுவனங்கள், பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டதுடன், வாகனப் போக்குவரத்தும் முற்றாக நிறுத்தப்பட்டது. இதனால் வீதிகள் அனைத்தும் வெறிச்சோடிக் காணப்பட்டன. வீதிகளில் மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

பிரதான வீதிகள் குச்சொழுங்கைகள் மற்றும் சந்திகள் என அனைத்துப்பகுதி களிலும் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டி ருந்தது. ரயர்கள் போடப்பட்டு அவை தீயிடப்பட்டிருந்தமையால் எங்கும் புகை மண்டலமாகவே இருந்தது. அத்துடன் வீதிக்கு குறுக்காக மின் கம்பங்கள் போடப் பட்டும் மரங்கள் தறித்து வீழ்த்தப்பட்டு மிருந்தது.

தனியார் பேருந்துகள் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பேருந்துகள் மற்றும் ஓட்டோக்கள் எவையும் சேவையில் ஈடுபட வில்லை. இந்நிலையில் முகமாலையூடான போக்குவரத்து நடவடிக்கைகளும் துண்டிக் கப்பட்டிருந்தது.

இதனிடையே படுகொலை இடம்பெற்ற வல்வெட்டித்துறைப்பகுதியினில் இரண்டாம்

(12ஆம் பக்கம் பார்க்க)



வெறிச்சோடியுள்ள யாழ்.நகரம்

## மீசாலையில் வீதிமறியலில் ஈடுபட்ட மக்கள் மீது படையினர் சூடு

**- இளைஞர் ஒருவர் படுகாயம்**

(தென்மராட்சி)

வடமராட்சிப் பகுதியில் தமிழ் இளைஞர் இருவர் படுகொலை செய்யப்பட்டமையை கண்டித்து மீசாலைப் பகுதியில் வீதி மறியலில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். மேலும் இருவர் காயங்களுக்கு உள்ளாகினர்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த மாகலிங்கம் சுந்தரராசன் (வயது-24) என்பவரே படுகாயமடைந்து யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 9.55 மணியளவில் அப்பகுதியில் குழுமியிருந்த மக்கள் மீது இத்துப் பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் காயமடைந்தவர் அவரது நண்பரால் உந்துருளி மூலம் எடுத்து செல்லப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் (12ஆம் பக்கம் பார்க்க)

**புலிகள் - படையினர் ஆயர் இல்லத்தில் சந்திப்பு**

## தற்போதைய சூழலை தொடரவிடாது அமைதிபேண ஒத்துழைக்க முடிவு

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்களும், பிரதிநிதிகளும், சிறிலங்கா பாதுகாப்புப் படையினரின் தளபதிகள் ஆகியோர் போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழு அனுசர ணையுடன் யாழ் ஆயர் இல்லத்தில் ஓர் கலந்துரையாடல் நடத்தினர்.

இதன்போது இத்தகைய சூழ்நிலை தொடரவிடாது எதிர்வரும் மாவீரர் தினத்தை அமைதியுடன் முன்னெடுப்பதற்கு அனைத் துப் பகுதியின்ரும் பரஸ்பர உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்குவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றைய நிலைமை தொடர்பாக யாழ்.மாவட்ட அரசியல் துறை யினர் செய்திக்குறிப்பொன்றை வெளி யிட்டுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

### மூதூர் பகுதியில் இளைஞன் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொலை

மூதூரிற்கும், கந்தாளாய்க்கும் இடைப்பட்ட அலியொழுவ சந்திக் கும் அருகிலுள்ள வீடொன்றில் வைத்து நேற்று இரவு 8.00 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் துப்பாக்கி யால் சுட்டுக்கொலை செய்யப்பட் டுள்ளார்.

கிருஸ்ணபிள்ளை ரமேஸ்வரன் (வயது-25) என்ற இளைஞனே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அலியொழுவசந்தியிலுள்ள தனது உறவினர் வீட்டில் இவர் தங்கியிருந்த வேளையில் அங்கு சென்ற இனந்தெரியாத இரண்டு நபர்கள் இவரை சுட்டுக் கொன் றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தேசியத்தலைவரின் எதிர்பார்ப்புக்கிணங்க தோன்றிய புலிகளின் குரல் முன்னேறிச் செல்வது மகிழ்ச்சிக்குரியது

**-புலிகளின் குரல் வானொலிக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் வாழ்த்து**

எமது தேசியத்தலைவரின் எதிர்பார்ப்புக்கிணங்க தோற்றம் பெற்ற புலிகளின் குரல் வானொலி பல்வேறு இன்னல்கள், தடைகளை கடந்து படிப்படியாக ஓர் வளர்ச் சிக்கட்டத்தை நோக்கி முன்னேறிச் செல்வது என்பது எல்லோருக்கும் மகிழ்ச்சிக்கும் பெருமிதத்திற்கு முரிய ஒன்று.

இவ்வாறு புலிகளின் குரல் வானொலியின் 14ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தமிழீழ அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர் கள் தனது வாழத்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் தனது வாழ்த்துச் செய்தியில குறிப்பிட்டி ருப்பதாவது;

தமிழீழ மக்களின் ஓர் தேசிய வானொலியாக வளர்ச்சிபெற்று எமது தேசத்தின் உண்மை நிலையை வானலைகளில் வெளியுலகுக்குக் கொண்டுசெல்லும் புலிகளின் குரல் வானொலி தனது 14ஆவது அகவையை நிறைவுசெய்வதை யிட்டு பெருமகிழ்வும்பெருமிதமும் அடைகிறேன்.

எமதுதேசத்தின் உண்மை நிலையை களநிலை யதார்த் தத்தை திரிபுபடாது வெளி யுலகுக்கு கொண்டுசெல்ல வேண்டு மென்ற எமது தேசியத்தலைவரின் எதிர்பார்ப்புக்கிணங்க தோற்றம் பெற்ற புலிகளின் குரல் வானொலி பல்வேறு இன்னல்கள் தடை களைக்கடந்து படிப்படியாக ஓர் வளர்ச்சிக்கட்டத்தை நோக்கி முன்னேறிச் செல்வது எம் எல்லோருக்குமே மகிழ்ச்சிக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தவர் இராணுவத்தால் வைத்தியசாலையிலிருந்து அகற்றல்

யாழ்.வல்வெட்டித்துறைப் பகுதியில் இரு இளைஞர்கள் பலியான துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் காயமடைந்த நிலையில் வல்வெட்டித் துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொன்னுத்துரை தெய்வேந்திரம் என்பவர் நேற்றுப் பிற்பகல் சிறிலங்கா படையினரால் அழைத்துச்செல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத்துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் காயமடைந்த நிலையில் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டிருந்த பிரஸ்தாப நபருக்கு வைத்தியசாலைக்கு வந்தபடை யினர் இராணுவச்சீருடையினை

(12ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் நாள் நவம்பர் -27

**மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக - எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக - எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக - அமைந்து விட்டன.**

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

# வல்வை இளைஞர்கள் படுகொலைக்கு பல்வேறு பொது அமைப்புக்கள் கண்டனம்

வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் விளையாடிக் கொண்டிந்த இருஇளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு பல்வேறு பொது அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. வரமராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் இப்படியான கொலை நடவடிக்கைகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனத் தெரிவிதுள்ளது அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது வல்லையில் 19.11.2004 அன்று மாலை கொடூரமாக அதேநேரம் பேடித்தனமான முறையில் செய்யப்பட்ட கோரக்கொலை நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கும் மனவுறுதியுடன் எமது உள்ளக் கிடக்கைகளையும் புலப்படுத்துகின்றோம். நம்பிக்கை இயல்பின் இரத்தோட்ட நரம்பினை அறுத்தது போன்ற நடவடிக்கையாகும் இது இயல்பு வாழ்வு திரும்பமுடியாத திசையில்சென்று கொண்டிருக்கின்றது என்பதை இந்நடவடிக்கை வெளிப்படுத்தும். இயல்புவாழ்வின் எந்தவித திருப்பமுமின்றி தொடர் அவல அவதியிலேயே வேதனைகளோடு வாழ்வினை ஓட்டிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களாகிய எமது மனங்களுக்கு ஆறுதல்,நிம்மதி போன்றவற்றை ஏற்படுத்தும் ஒருகாலம் மாவீரர்களைக் கொண்டாடும் விழாக் காலமாகும்.

தமிழ் மக்கள் விடுதலை வாழ்வுக்காகத் தமது இன்னுயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களின் மகத்தான திருநாளைக் கொண்டாடும் முன்னெடுப்புக்களில் மனக்குளிர்ச்சியோடும் ஆழ நேசிப்போடும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் நடைபெற்றிருக்கும் இக்கோரக் கொலை நடவடிக்கை மக்களின் மனங்களை ஆழப் புண்படுத்தி விட்டது. அமைதியை நாடித் தொழிற்படும் கடின உழைப்புக்களையும் பயனற்றுப்போகும் மன எத்தனிப்புகளுடன் இம்மாதிரியான பேடித்தனங்களை சம்பந்தப்பட்டதரப்பார் செய்து முடிக்கின்றார்கள். உண்மையில் இப்படியான கொலை நடவடிக்கைகள் இம்மண்ணில் பாரதுரமான விளைவுகளையும் மோசமான நினைவுகளையும் ஏற்படுத்தும்.

இந்நடவடிக்கை மூலமாமக எதனைச் சாதித்துவிடலாம் என எண்ணியுள்ளார்களோ அது நிச்சயம் ஒருபோதும் நிறைவேறாது என்பதை இக்கொலைகளோடு சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

நாம் எமது மனவிருப்பின் அடிப்படையில் எந்த நினைவுக் கடைப்பிடிப்புக்களையும் கொண்டாட எழுச்சிகளையும் நிகழ்த்த,காண விளைந்தோமோ அவையனைத்தும் எப்பிசகுமின்றி நிறைவேறும் வரலாற்று நதியோட்டத்தில் தவிர்க்கவே முடியாத அலையெடுப்பாக பொருந்திப்பதிந்து எழுந்துள்ள மாவீரர் தினக்கொண்டாட்டம் நடக்கும், நிறைவேறும் என்பதனைத் தமிழ் மக்களின் பெயரால் உரத்து ஒலிக்கின்றோம்.

இக்கொலைகளின் பின்னணியில் உள்ளவர்களுக்குச் சொல்கின்றோம் இம்மாதிரியான நடவடிக்கைகள் மூலம் தமிழ்மக்களின் எழுச்சியைத் தடுத்து விட முடியாது என்பதை இன்னமும் நீங்கள் உணர்ந்துகொள்ள வில்லையா? வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் படிப்பினை நீங்கள் பெறவேயில்லையா?

இருப்பினும் அப்பாவி இளைஞர்கள் இருவர் மீது நடத்திய மனித நாகரிகமற்ற அநாகரிகத்தின் உச்சமான இக்கொலைகளை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன் உலக அரங்கில் இதனால் உங்களுக்கு ஏற்படப்போகும் அவமானகரமான வரலாற்று நிலை தவிர்க்கவே முடியாதது என்பதை வடமராட்சிப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினராகிய நாம் உணர்த்திவைக்ககின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் உதைபந்தாட்ட சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழர்களுக்கு எதிரான சிங்கள இனவாத இராணுவ வெறியாட்டத் தின் தொடர் நிகழ்வாகவே வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இரண்டு அப்பாவித் தமிழ் இளைஞர்களை இராணுவம் படுகொலை செய்துள்ளது.

உலகளாவிய தமிழ்த்தேசியம் ஒற்றுமையையும் எழுச்சியையும் காணப்பொறுக்காத சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்ட ரீதியில் குழப்பும் ஒரு திட்டமிட்ட செயலாகவே கருத வேண்டியுள்ளது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (36)

## குழிஇடிந்து வீழ்ந்ததால் புதையுண்டு இளைஞர் மரணம்

குழி இடிந்து விழுந்ததால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக மரணமானார். மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது நேற்றுப்பெய்த கடும் மழையினால் கிணற்றின் அருகில் நீர் இறைக்கும் இயந்திரம் வைத்திருந்த எட்டடிக்குழியினுள் மழைநீர் நிரம்பி நின்றதால் அவற்றை வெளியகற்றுவதற்காக குழியினுள் இறங்கி நீரை வெளியேற்றிவிட்டு குழியைவிட்டு வெளியேறும்போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

தயாபரன் (வயது-26,செல்வாநகர்,கிளிநொச்சி) என்ற இளம் குடும்பஸ்தரே இச்சம்பவத்தின்போது பலியானவர் ஆவார்.

## - முல்லை மாவட்ட -
## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும் மாவீரர் நாள் சிறப்பு ஒழுங்கும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள் நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் நடைபெற உள்ளது. அனைத்து பிரதேசங்களிலும்,சிவப்பு,மஞ்சள் கொடிகள கட்டப்பட்ட 300பதாகைகளும், 30 இற்கு மேற்பட்ட சிகரங்களும கட்டப்பட்டு வருவதுடன் பல பகுதிகளிலும் சிரமதானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்தும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலும், மல்லாவி மத்தியகல்லூரியிலும், நாளை 9.30 மணிக்கு கற்சிலைமடு அத.க.பாடசாலையிலும்,உடையார் கட்டு மகாவித்தியாலயத்திலும், 23ஆம் திகதி காலை 9.30 மணிக்கு, பாலிநகர் மகாவித்தியாலயத்திலும், 24ஆம் திகதி காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்பு கொக்குளாய் அ.த.க. பாடசாலையிலும், வலது கரை அ.த.க. பாடசாலையிலும்,25ஆம் திகதி காலை 9.30 மணிக்குமுள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும்,மாங்குளம் மாகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது. மாவீரர் நாள் நிகழ்விற்கு வெளிமாட்டத்திலிருந்து, முள்ளியவளை, வன்னிவிழாங்குளம்,ஆலங்குளம், அளம்பில், மணலாறு ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களுக்கும் வரும் மாவீரர்களின் பெற்றோர் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, மாங்குளம் மாகாவித்தியாலயத்திலும்,மல்லாவி மத்தியகல்லூரியிலும் தங்கவைக்கப்பட்டு கௌரவிக்கபபடுவார்கள். துயிலுமில்லங்களுக்கு செல்லும் உந்துருளி, ஈருருளி வாகன இலவச தரிப்பிடங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. மாவீரர் நாள் நிகழ்வன்று,துயிலும் இல்லங்களுக்குச்செல்லும் மாவீரர் பெற்றோர்களுக்கு, இலவச வாகன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. என்பதனை ஒழுங்கமைப்பு,மாவீரர் நாள் விழாக்குழு, அரசியல் துறையினர் அறியத்தந்துள்ளனர்.

## புன்னாலைக்கட்டுவன் கொலைதொடர்பில் கைதானோர் எண்மரும் விடுதலை

(நல்லூர்)

புன்னாலைக்கட்டுவனில் சுடப்பட்டு மரணம் அடைந்த வயோதிபரின் மரணம் சம்பந்தமாக மல்லாகம் நீதிமன்றில் சரணடைந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு இருந்த சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த அருணாசலம் முத்தையா என்பவர் 09.09.2004 அன்று துப்பாக்கியால் சுடப்பட்டு மரணம் அடைந்தார்.

சுன்னாகம் பொலிசார் இம் மரணம் சம்பந்தமாக இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 8பேரை தேடியதைத் தொடர்ந்து 12.9.2004 சட்டத்தரணி மு.சபாநாதன் மூலம் நீதிமன்றத்தில் சரணடைந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் ஏற்கனவே பிணை மனுவில் விடப்பட்டிருந்தனர். மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் இடம்பெற்ற விசாரணையைத் தொடர்ந்து குற்றம் சுமத்துவதற்குப் போதிய ஆதாரம் இல்லாததால் நீதிமன்றம் கருத்திற் கொண்டு பல்கலைக்கழக மாணவர்களான ஜெயசிங்கம் ருசிகரன், இரத்தினசிங்கம் சசிகரன் மற்றும் கந்தசாமி கனகலிங்கம், நல்லரத்தினம் சசிகேசன்,தம்பிராசா,சிறிகாந்தன்,நல்லரத்தினம் செல்வநேசன்,ராசரத்தினம் விஷணுகரன், கனகலிங்கம் ருசாந் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (41)

## மாவீரர்களின் பெற்றோர்கள் பிரதேச ரீதியாக கௌரவிப்பு

மாவீரரை உவந்தளித்த பெற்றோரைக் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகளை கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் ஒழுங்கமைத்துள்ளனர். இந்நிகழ்வு வரும் 23 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்துவக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. அன்று இரவு 7.00 மணிக்கு பொதுக்கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. மகளிர் கலைபண்பாட்டுக் கழகத்தினர் தாயக ராகங்கள் எனும் இசை நிகழ்ச்சியை வழங்க உள்ளனர். சங்கநாதம் எனும் எழுச்சிஇசை நாட்டிய நிகழ்வும் நடைபெறும்.

யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையினரினால் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் இன்றும் நாளையும் இடம் பெறவுள்ளன.

நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் இன்று காலை 9.00மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மாகாவித்தியாலயத்தில் வைத்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் நாளை காலை 9.00 மணிக்கு வைத்தீஸ்வராக்கல்லூரி மண்டபத்தில்வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

விசுவமடு பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு இன்று றெட்பானா பாரதிபுரம்வித்தியாலயத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற வுள்ளது. பிரதேச தேசிய எழுச் சிப்பேரவை செயலாளர் ப.பத்மநாதன தலைமையில் நிகழ்வு நடைபெற வுள்ளது. பிரதேசத்தில் உள்ள மாவீரர் பெற்றோர் உரித்துடையோர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேசதேசிய எழுச்சிப் பேரவையினர் அன்புடன் அழைக்கின்றனர். வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உள்ள மாவீரர் பெற்றோர்களின் கௌரவிப்பு நிகழ்வு கிளி-இராமநாதபுரம் மகாவித்தியாலத்தில நாளை காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உள்ள அனைத்து மாவீரர்களின் பெற்றோர்களையும் கௌவிக்கும் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

துணுக்காய் பாண்டியன்குளம் பிரதேசத்தில் அரசியல் துறையினரால் அப்பகுதி மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இன்று மல்லாவி மத்திய கல்லூரியிலும், 23ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பாலிநகர் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. மேற்படி பிரதேசத்திற்கு உட்பட்ட 250 இற்கு மேற்பட்ட பெற்றோர்களை கௌரவிப்பதற்கு அரசியல்துறையினர் ஏற்பாடுகளை செய்து கொண்டு வருகின்றனர். (33,41,12,14,24)

## கண்டெடுப்பு

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வீதியில் கடந்த 26.10.2004 அன்று பெறுமதி மிக்க தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு முல்லைத்தீவு பங்குத்தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.அதைத் தவறவிட்டவர்கள் ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து தேவாலய பூசையில் அறிவித்ததாகவும் இதுவரை எவரும் உரிமை கோரவில்லையென்றும் அவர் தெரிவித்தார். (20)


03ஆவது ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 09 04 1932



விண்ணில் 27 11 2001

முத்தமிழ்மணி, திருமுறைத்தென்றல்

முத்தமிழ்மணி திரு. சு. ப. கணேசசுந்தரன் அவர்கள்

முத்தமிழ் மணியாய் மூவர் தேவாரம்
முறையுறப் பண்பொழிந்த அப்பாவே,
முத்தமிழ் வாதவூரன் வாசகத்தை
மொழிந்தெமதுள்ளமுருக்கும்
சித்துமுடையோய்-போராட்டச்
சூத்திரத்தின் போக்குணர்ந்து - செய்களின்
மூவரைப் போராடப்
போகவென விடைகொடுத்த உத்தமரே - நீவீர்
இத்தரைவிட்டு ஆண்டு மூன்றா? - இனி
எப்பிறப்பில் மீளக்காண்போம்?

எமது இதயத்தெய்வத்தின் மூன்றாவதுஆண்டு நிறைவு திதி தினமாகிய திங்கள் (22.11.2004) அன்று நடைபெறவிருக்கும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்பர்கள், போராளிகள், உற்றாரை அன்புடன் அழைக்கின்றோம்.

2ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

(சி.10630)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# பாகிஸ்தானுக்கு ஆயுதவிற்பனை திட்டத்தில் அமெரிக்காவின் கொள்கையில் மாற்றம் வேண்டும்

## புஷ்சிற்கு அமெரிக்க எம்.பி. கோரிக்கை

(வோஷிங்டன்)

**அமெரிக்காவின் இராணுவத்துறை பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை விற்கப்போவதாக அறிவித்துள்ளது. பீ.3 சி ஓரியன் வகை கண் காணிப்பு விமானங்களையும் 2 ஆயிரம் ஏவுகணைகளையும் 14 பிளை-டு-பை ஏவுகணைகளையும் விற்க இருக்கிறது. 8 விமானங் களின் மொத்த மதிப்பு 5 ஆயிரம் கோடி ரூபாய். ஏவுகணைகளின் மதிப்பு 41 கோடி ரூபாய் ஆகும்.**

இந்தத் திட்டத்துக்கு அமெரிக் கப் பாராளுமன்ற உறுப்பினர்களின் இந்திய ஆதரவுக்குழு நிறுவன ரும், பாராளுமன்ற உறுப்பினரு மான பிராங்க் பல்லோன் கடும் எதிர்ப்புத் தெரிவித்து இருக்கிறார்.


இது தொடர்பாக அவர் சனாதி பதி புஷ்சுக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். பாகிஸ்தா னுக்கு ஆயுதம் விற்கும் திட்டத்தை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

அதில் அவர் கூறி இருப்பதா வது; அமெரிக்காவின் நலன் அதன் முன்னுரிமை ஆகியவை குறித்து மறு ஆய்வு செய்ய வேண்டும். பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் விற்பதற்கு எதிராக கடும் நிலையை எடுக்க வேண்டும்.

பாகிஸ்தானுக்கு ராணுவ உதவி அளிப்பதும், ஆயுதங்களை விற்பதும் தெற்கு ஆசியா முழு வதும் குறிப்பாக இந்தியாவில் பாதுகாப்பு குறித்த கவலையை அதிகரிக்கிறது. பதட்டத்தை அதிகமாக்குகிறது.

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் நமது தோழமை நாடு என்பதை நான் ஒப்புக்கொள் கிறேன். ஆனால் பாகிஸ்தான் தன் நாட்டு தீவிரவாதத்துக்கு இன்னும் முற்றுப்புள்ளி வைக்கவில்லை. அந்நிய ராணுவ உதவி அளிக்கப் படும் போது எல்லாம் அதை இந் தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் பயன்படுத்தி வந்துள்ளது.

பாகிஸ்தான் இன்னும் ராணுவ ஆட்சியின் கீழ்தான் இருந்து வருகிறது. சனநாயகப் பாதைக்குத் திரும்புவதற்கு அர்த்தமுள்ள நடவ டிக்கை எதையும் எடுக்கவில்லை. எனவே பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி அளிப்பதை தடுத்து நிறுத்த வேண்டும். இவ்வாறு பல்லோன் கூறி இருக்கிறார்.



பேளினில் மத்திய வங்கித் தலைவர்களிற்கும் நிதி அமைச்சர்களிற்குமான ஜீ-20 மாநாட்டின் தோற்றம்.

## வடகொரிய அணுவாயுத திட்டம் பற்றி ஆராய சீனாவின் ஆதரவை கோருகிறார் புஷ்

வடகொரியாவில் சர்ச்சைக்குரிய அணுவாயுத திட்டம் குறித்து அந்நாட்டுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் சீன..வின் உதவியைக் கோரவுள்ளார்.

ஆசிய பசுபிக் உச்சி மாநாட்டின் போது அமெரிக்க சனாதிபதி சீன சனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.இவ்வார இறுதியில் நடைபெறவுள்ள ஆசிய பசுபிக்பொருளாதார ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் ரஷ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டின், அமெரிக்க சனாதிபதி புஷ் உட்பட பல தலைவர்கள் இப்பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.



ஈராக் பாக்தாத்தில் றொக்கட் தாக்குதலில் அழிக்கப்பட்ட அமெரிக்க இராணுவ வாகனம் ஒன்றினுள் தேடுதல் நடத்தும் அமெரிக்கப் படையினர் இத்தாக்குதலில் பல படையினர் கொல்லப்பட்டனர்.

# எனக்கு அதிர்ஷ்டம் தந்த கடவுளுக்கு நன்றி பாகிஸ்தான் சனாதிபதி மனம் திறந்தபேட்டி

கடவுள் அருளும் அதிர்ஷ்டமும் என்னை காப்பாற்றியது என அல்-ஹைதா தாக்குதலிலிருந்து உயிர் தப்பிய பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் மனம் திறந்த பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார்.

ஏ.எப்.பி என்ற செய்தி நிறுவனத் திற்கு அவர் அளித்த பேட்டியில் 'கடந்த ஆண்டு அல்-ஹைதா தீவிர வாதிகளின் கொலை முயற்சியி லிருந்து நான் தப்பித்தேன். கடவுள் அருளும் அதிர்ஷ்டமும் இருந்த தால் நான் உயிர் தப்பினேன். நான் நெப்போலியனின் கருத்தில் எப் போதும் உடன்பாடு உள்ளவன். அவர் எப்பொழுதும் சொல்லுவார் ஒரு தலைவர் அதிர்ஷ்டம் உள்ள வனாக இருக்க வேண்டும் என்று அதைப்போல் நான் அதிர்ஷ்டத்தால் தற்போது உயிர் வாழ்ந்து கொண் டிருக்கிறேன். அதற்கு முந்திய சம்பவங்களிலும் அதிர்ஷ்டத்தால் பலமுறை தப்பியிருக்கிறேன். எனக்கு அதிர்ஷ்டம் கொடுத்த கடவுளுக்கு நான் நன்றி கூறுகி றேன். இவ்வாறு முஷாரப் கூறினாா.

கடந்த ஆண்டு ராவல்பிண்டியி லுள்ள அவரது வீட்டிலிருந்து விமான நிலையத்திற்குச் சென்ற போர்து அவரது கார் பாலம் ஒன்றைக் கடந்து சென்றது. பாலத்தை கடந்த அடுத்த வினாடியே பாலத்தில் குண்டு வெடித்தது. இதனால் முஷாரப் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினார்.

கிறிஸ்மஸ் தினத்தன்று தற் கொலைப் படையினர் அவர் காருக் குள் வெடிகுண்டுகளைப் பதுக்கி வைத்திருந்தனர். அந்தக்கார் நக ருக்குள் செல்லும் பொழுது நெரி சல் மிகுந்த பகுதியில் குண்டு வெடித் துச் சிதறியது. இதில் அவர் அதிஷட வசமாக உயிர் தப்பினார். ஆனால பொதுமக்கள் பலர் கொல்லப்பட் டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## போதைமருந்து பாவனை பழக்கத்தில் சுவிற்சர்லாந்து இளைஞர்கள் முதலிடம்

(ஜுரிச்)

ஐரோப்பிய நாடுகளிலேயே சுவிட்சர்லாந்து நாட்டு இளைஞர்கள் தான் அதிக அளவில் போதை மருந்து பயன்படுத்துகின்றனர் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஐரோப்பாவில் உள்ள 30 நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் எந்தளவுக்கு மது மற்றும் போதைக்கு அடிமையாகி யுள்ளனர் என்பது குறித்து ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த மது மற்றும் போதை மருந்து தடுப்பு அமைப்பு இந்த ஆய்வை மேற்கொண்டது. ஆய்வின் முடிவுகள் குறித்து இந்த அமைப் பின் தலைவர் ஹோல்ஜர் ஸ்கிமிட் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள 11வயது முதல் 15 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களிடம் ஆய்வு நடத் தப்பட்டது. இதில் சுவிட்சர்லாந்து நாட்டு இளைஞர்களே போதை மருந்து உபயோகிப்பதில் முதலிடம பெறுகின்றனர். கடந்த ஒரு ஆண் டுக்குள் மூன்றில் ஒரு சுவிட்சர் லாந்து இளைஞர் போதைக்கு அடிமை யாகியுள்ளனர். கடந்த 1988 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண் டுக்குள் போதைக்கு அடிமையான இளைஞர்களின் எண்ணிக்கை 10 சதவீதம் அதிகரித்துள்ளது. கலா சார மாற்றத்தினாலும், அவர்களை சரியாக வழிநடத்திச் செல்லாத தாலும் ஏராளமான இளைஞர்கள் புகை பிடிப்பதிலும் மது அருந்து வதிலும், போதை மருந்து பயன் படுத்துவதிலும் தங்களை ஈடுபடுத் திக்கொண்டுள்ளனர்.

# போர்த்துக்கல் விமானத்தில் புகை 288 பயணிகள் உயிர் பிழைத்தனர்

(லிஸ்பன்)

போர்த்துக்கல் நாட்டில் விமானம ஒன்றின் கேபினிலிருந்து புகை வந்ததை அடுத்து அந்த விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது. அந்த விமானத்தில் இருந்த 288 பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இருப்பினும், ஒன்பது பயணிகள் படுகாயமடைந்தனர்.


இபேரியா ஏர்லைன்ஸ் நிறுவ னத்தைச் சேர்ந்த விமானம் ஒன்று நேற்று முன்தினம் மட்ரிட் நகரி லிருந்து மெக்சிக்கோவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அப்போது விமானத்தின் கேபினில் இருந்து திடீரென்று புகை வந்ததையடுத்து அவசரஅவசரமாக போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் தரையிறக கப்பட்டது. இதனால் விமானத்தில் இருந்த 288 பயணிகளும் உயிர் தப்பினர். அவர்கள் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். இருப்பினும், பயணிகள் முண்டியடித்துக் கொண்டு இறங்கியதால் அப்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 9 பேர் காயம டைந்தனர். ஒரு பெண்ணுக்கு கால் முறிந்தது. இந்தச் சம்பவத்தி னால், லிஸ்பன் விமான நிலையம் நான்கு மணிநேரம் மூடப்பட்டது. புகை வந்த தற்கான காரணம் உடனடியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. இச்சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்றுவருகிறது.

## பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்; ஈராக்கில் அதிகாரி பலி; ஐவர் காயம்


(பாக்தாத்)

ஈராக்கில் பொலிஸ் நிலையத் தின் மீது கெரில்லாக்கள் தாக்குதல் நடத்தியதில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஐந்து பொலிசார் படுகாயமடைந்தனர்.

ஈராக்கில் சதாம் ஆட்சி ஒழிக் கப்பட்ட பின், அங்கு நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படை களுக்கு ஈராக் பொலிசார் ஒத்து ழைப்பு அளித்து வருகின்றனர். இதைக் கண்டித்து சதாம் ஆதரவு கெரில்லாக்கள் பொலிஸ் நிலையங்களை கார் குண்டு மூலம் தாக்குதல் நடத்தி அழித்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு பாக்தாத்தின் வடக்கு பகுதியில் உள்ள முக்தாதியா என்ற இடத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தின் மீது கெரில்லாக்கள் சிறிய ரக பீரங்கி மூலம் தாக்குதல் நடத்தி னர். இந்தத் தாக்குதலில் பொலிஸ் நிலைய அதிகாரி வாமித்ராத் என்பவர் கொல்லப்பட்டார். ஐந்து பொலிசார் படுகாயடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



பிலிப்பைன்சின் வடக்கே உள்ள பக்கியோ நகரில் பக்ரீரியத் தொற்று நோயான மனிக்கோ கொக்சிபா நோய்த் தாக்கம் பரவுவதை அடுத்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முகமூடி அணிந்துள்ளார்.



பிலிப்பைன்சில் புயற்காற்றினால் 300 வீடுகள் அழிக்கப்பட் டதுடன் மூவர் கொல்லப் பட்டுள்ளனர்.

# பாதிக்கப்பட்ட மக்கள் துன்பப்படும் போது சமாதானம், நல்லிணக்கம் பற்றிப் பேசமுடியாது

### –திருகோணமலை மாவட்ட அ.சா.நி. ஒன்றியத்தலைவர் தெரிவிப்பு

(திருகோணமலை)

**பாதிக்கப்பட்ட மக்கள் தங்குமிடம், உணவு, உடை இன்றி துன்பப் படும்போது 'சமாதானம் மற்றும் நல்லிணக்கம் பற்றி எவரும் பேச முடியாது இவை எல்லாம் துன்பப்படும் மக்களுக்கு இரண்டாம் பட்சமே என்று திருகோணமலை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒன்றியத் தின் தலைவர் து.தவசிலிங்கம் மனிதாபிமான அமைப்புக்கள் ஒன்றியத் தின் கிழக்கு மாகாணச்செயலமர்விற்குத் தலைமை வகித்துப்பேசும் போது தெரிவித்தார்.**

திருகோணமலைரொட்டறி இல்லத்தில் இச் செயலமர்வு வியா ழன் இடம் பெற்றது. சிறப்புப் பேச் சாளராக வடக்கு கிழக்கு மாகாண (திட்டமிடல்) பிரதி பிரதம செய லாளர் வி.எஸ்.சுவாமிநாதன், நிகொட் திருகோணமலை மாவட் டப் பிரதிப் பணிப்பாளர் ஆர். உமா காந்தன், மேலதிக அரசாங்க அதி பர் என். சிங்கராயர், மாவட்டப் புனர்வாழ்வுப் பணிப்பாளர் ஹசேன் டீன் ஆகியோர் பங்கு பற்றினர்.

ஒன்றியத்தின் தலைவர் தவ சிலிங்கம் மேலும் கூறியதாவது; 1990 வன்செயலில் இடம் பெயர்ந்த 57,000இற்கு அதிகமான குடும்பங்களில் சுமார் 51 ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்பட்டாலும் அவர்கள் முறையாக மீளக்குடிய மர்த்தப்படவில்லை. அவர்களுக்கு அடிப்படை வசதிகளே செய்து கொடுக்கப்படவில்லை.பத்து அகதி முகாம்களிலும், நலன்புரி நிலை யங்களிலும் இன்னும் 554 குடும் பங்கள் தங்கியுள்ளன. மேலும் 6,467 குடும்பங்கள் தங்களின் உற வினர்கள் மற்றும் நண்பர்களுடனும் வேறு சில குடும்பங்கள் இந்தி யாவிலும் தங்கியுள்ளன. யுத்தத் தில் கணவன் மாரை இழந்த 6000 இற்கு அதிகமான விதவைகள் பிரதான நீரோட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கான உதவியை எதிர் பார்த்துள்ளனர். யுத்தத்தினால் சேதமடைந்த வீடுகள் இன்னும் புனரமைக்கப்படவில்லை. கிராமமக் களுக்குத் தேவையான வைத்திய வசதிகள் வழங்கப்படவில்லை, நல்ல குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லை என்று ஒன்றியத்தலைவர் தவசிலிங்கம் தெரிவித்தார். ஆரம்பத்தில் மனிதா பிமான அமைப்புக்கள் ஒன்றியத் தின் திருகோணமலை மாவட்ட அதிகாரி வி.கலைச்செல்வன் வர வேற்புரை நிகழ்த்தினார். (25)

## ஒட்டுசுட்டான் களிக்காடு வீதியை புனரமைக்கக் கோரிக்கை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டானிலிருந்து களிகாடுசெல்லும் வீதியும், பாலமும் திருத்தப்படாமையினால் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இவ்வீதி கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக திருத்தம் எதுவும் செய்யப்படவில்லை இவ்வீதியூடாக பிராமணங்குளம், அல்கரை, புதுக்குளம் சிவநகர் ஆகிய கிராமங்களுக்கும் செல்கின்றது.

1998ஆம் ஆண்டு "ரிவிபல" இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவ அரண்கள், பதுங்கு குழிகள் என்பன வெட்டப்பட்டு வீதி மிகவும் பாழடைந்துள்ளது. இதேவேளை குருவிச்சை ஆறு வரும் இடத்தில் உள்ள பாலமும் வேறு ஒரு பாலமும் உடைந்துள்ளமையினால் அண்மையில் பெய்த மழையினால் மக்கள் இப்பாலத்தின் மேல் கயிற்றை கட்டி கடந்து சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஈருருளியில் செல்லும் மாணவர்கள் மழைபெய்தால் நடந்து செல்லவேண்டிய அவலநிலை தோன்றியுள்ளது எனவே இதில் சம்பந்தப்பட்டோர் கவனம் எடுக்குமாறு அப்பகுதி மக்களும் கிராம முன்னேற்ற அபிவிருத்திசங்க நிர்வாகத்தினரும் கேட்டுகொள்கின்றனர். (05)

—வவுனியா மாவட்டத்தில்—

## கல்வித்தரத்தை மேம்பாடடைய செய்வதற்கான கலந்துரையாடல்

வவுனியா மாவட்ட பிள்ளைகளின் கல்வித்தரத்தினை மேம்பாட்டையச் செய்தல் தொடர்பான கலந்துரை யாடல் ஒன்று இம்மாதம் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலுக்கு அரச அதிபர் க.கணேஷ் அவர்கள் தலை மைதாங்குவார். இக்கலந்துரை யாடலில் மாணவர்களை பாடசா லைக்கு மீளச்சேர்த்தல் இழந்த கல்வியைமீளப்பெறல், பாட சாலைப்பிள்ளைகளின் கல்வித் தரம் ஆகிய விடயங்கள் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப் படவுள்ளன.

இதில் வன்னிமாவட்ட பாராளு மன்ற உறுப்பினர்களான சதாசிவம் கனகரட்ணம், சு.வினோநோகா ரதலிங்கம், சிவநாதன்கிஷோர், சிவசக்தி ஆனந்தன்,செல்வம் அடைக்கலநாதன்,ரிசாட்பதியுதீன் உட்பட பலர் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கவுள்ள னர். (10)

## பருத்தித்துறை பி.ச உபஅலுவலகம் மருதங்கேணியில் திறப்பு

வடமராட்சி கிழக்கு பருத்தித் துறை பிரதேச சபையின் உப அலு வலகம் எதிர்வரும் 25 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

மருதங்கேணில் கடந்த 2000 ஆம் ஆண்டு இடம் பெற்ற இரா ணுவ நடவடிக்கையில் முற்றாக சேதமடைந்த நிலையில் இருந்த இவ் அலுவலகத்தை வடமராட்சி கிழக்கு மக்களின் தொடர் முயற்சி யினால் மூன்று இலட்சம் ரூபா செலவில் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு சகல வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

இந் நிகழ்வுகள் பருத்தித் துறை பிரதேச சபை செயலாளர் சி. பசு பதி தலைமையில் நடைபெற இருக்கிறது. இதனை பிரதம விருத்தினராக வருகைதரும் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா திறந்து வைப்பார் சிறப்பு விருத்தினராக வடமராட்சிக் கிழக்கு கடற்புலி களின் அரசியல் துறைப்பொறுப் பாளர், மருதங்கேணி உதவிஅரச அதிபர், அப்பிரதேச புனரமைப்புக் குழுத்தலைவர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். இந் நிகழ்வுக்கு வடமராட்சிக் கிழக்கு மக்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு விழாக் குழு வேண்டி நிற்கின்றது. (11)

## கலந்துரையாடல்

பன்னை வேலைப்பயிற்சி பெற்றவர்கள், ஏற்கனவே அத் தொழிலில் ஈடுபடுபவர்கள் ஆகி யோர்களிற்கான முக்கிய கலந்து ரையாடல் ஒன்றினை உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது. இன்று காலை 11மணிக்கு யாழ்.சாலை கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர் வாழ்வுக்கழக நடுவப்பணியக கேட் போர் கூடத்தில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் கேட்டுள்ளது.




மாவீரர் நாளையொட்டி ஆனையிறவில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவு (படம்-சசி)

## முல்லை மாவட்ட தபாலகத்திற்கு மின்துண்டிப்பால் பாதிப்பு

முல்லை மாவட்ட தபால் அலுவலகத்திற்கு மின்சாரம் துண் டிக்கப்பட்டது. இதனால் தபால் தரம் பிரிப்பதில் சிரமம் ஏற்பட் டுள்ளதாக முல்லை மாவட்டதபால் அதிபர் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் கடந்த 23.05.2003இல் இருந்து முல்லை மாவட்ட தபால் அலு வலகம் தனியார் ஒருவரின் கட்ட டத்தில் இயங்கி வருகின்ற தென்றும் கட்டடஉரிமையாளர் உரிய பத்திரங்களை சமர்ப்பிக்காது போனதினால் ஒப்பந்தம் செய்ய முடியவில்லையென்றும் இதனால் இது வரையும் வாடகைப்பணமும் செலுத்தமுடியாமற்போயுள்ளது என்றும் இதனால் மின்சாரக் கட்ட ணத்தை கட்டடத்தின் உரிமையாளர் செலுத்தாததினால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. என்றும் தெரிவித்தார்.

காலை 5.00 மணிக்கு கடமை தொடங்கி மாலை 6.00 மணிவ ரையும் பணியிலீடுபடும் அஞ்சல் அலுவலகம் மாரிகாலமாதலினால் போதிய வெளிச்சமின்றி கடமை களை செவ்வனே நிறைவேற்ற முடியாத நிலை உள்ளதாகவும் தெரிவித்தார். (20)

## சிதம்பரபுரத்திற்கு தபால் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

(வவுனியா செய்தியாளர்)

சிதம்பரபுரம் கிராமத்தில் உள்ள மக்கள் தமக்கு தபால் விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கு மாறு வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரிடம் கோரிக்கை விடுத்துள் ளனர்.சிதம்பரபுரம் குடியேற்றக் கிராமம் அமைக்கப்பட்டு 8 வருடங் கள் பூர்த்தியாகி உள்ள நிலை யிலும் தமக்கு இதுவரை தபால் விநியோகம் மேற்கொள்ளப்படு வதில்லை எனவும், தமக்கு அரு கில் உள்ள ஆசிகுளம் கிராமத் திற்கு தபால் விநியோகம் செய்யும் தபால் ஊழியர் சிதம்பரபுரம் கிராம மக்களுக்குரிய கடிதங்களை தின மும் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினரிடம் கையளித்து விட்டுச்செல்வதாகவும் இதனால் தபால் தாமதமாகவே கிடைப்பதாக வும் பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிட்டுள்ளனர்.

இந்நிலையைப் போக்கி தமது கிராமத்தில் ஒரு உபதபாலகத் தினை அமைத்து தமக்கு முறை யான தபால் விநியோகம் மேற் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் மேலும் கோரி யுள்ளனர். (10)

## உந்துருளிகள் மோதிக்கொண்டதில் மல்லாவியில் இருவர் காயம்

(மல்லாவி)

மல்லாவியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற வீதிவிபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும்தெரியவருகையில், மாலை 5.15 மணியளவில் இரண்டு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் காயமடைந்த துணுக்காய் கொத்தம்பிய குளத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை (வயது 60) என்பவர் மல்லாவி மருத்துவமனையில் சிசிச்சை பெற்றுவருகின்றார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (24)

## உழவு இயந்திர, சிறு உழவுயந்திர சாரதிகளுக்கான வீதி ஒழுங்கு கலந்துரையாடல்

தமிழீழக் காவல்துறை நடு வப்பணியகத்தில் நேற்று முன் தினம் கிளிநொச்சிப் பிரதேசத்தில் வாடகைக்கு ஓடும் உழவுஇயந்திர, சிறு உழவு இயந்திர சாரதி களுக்கான வீதி ஒழுங்கு விதி முறைகள் தொடர்பான கலந்துரை யாடல் நடாத்தப்பட்டது. கருத்துக் களை வீதிப்போக்குவரத்துக் கண்காணிப்பாளர் கு.கனகலிங்கம் வழங்கினார். இதில் ஐம்பதிற்கும் மேற்பட்ட சாரதிகள் கலந்து கொண்டனர்.

இதேபோன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆயப்பகுதி நடு வப்பணியகத்தில் பதில் ஆள ணிமேலாளர் மதீஸ்வரன் தலை மையில் வீதி ஒழுங்கு தொடர் பான கருத்தூட்டல் 11.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணிவரை நடாத்தப்பட்டது. வீதி ஒழுங்கு தொடர்பான கருத்துக்களை வீதிப்போக்குவரத்துப் பிரிவு பொறுப்பாளர் சி.சிவகுமாரன் வழங்கினார். இதில் அங்கு பணி யாற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதேபோன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள போக்குவரத்து கண்காணிப்பு நடுவப்பணியகத்தில் மேலாளர் சபேசன் தலைமையில் கருத்தூட்டல் நடாத்தப்பட்டது. இக் கலந்துரையாடல் பி.ப.3.00 மணிக்கு ஆரம்பமாகி பி.ப. 4.30 மணிக்கு முடிவடைந்தது. வீதிப் போக்குவரத்துத் தொடர்பான கருத்துக்களை வீதிப்போக்கு வரத்துப் பிரிவு பொறுப்பாளர் சி.சிவகுமாரன் வழங்கினார். இதில் அங்கு பணியாற்றும் பணியாளர் கள் கலந்து கொண்டனர்.



வீதிவிபத்துக்கள் அதிகரித்து வருவதையடுத்து பாடசாலை மாணவர்களின் வீதி ஒழுங்குகளைக் கவனிக்கும் தமிழீழ காவல் துறையினர் (படம் சோதி)

# சிறில.அரசின் சூழ்ச்சியை உணர்ந்து கொண்டு ஈழத்தமிழருக்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும்

### -யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் இந்தியப் பிரதமருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

**பலாலி, திருகோணமலை ஒப்பந்தங்களின் மூலம் இலங்கை, இந்திய தமிழர்களிடையே பகையை ஏற்படுத்துவதற்கு சிறிலங்கா அரசு முயற்சிக்கின்றது. இந்தியா இதனை உணர்ந்து கொண்டு தமது அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் ஈழத்தமிழருக்கு ஒரே குரலில் ஆதரவு வழங்க வேண்டுமென யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது**

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சிறிலங்காவின் இனப்பிரச்சினையின் போக்கு பிராந்திய, சர்வதேச மட்டத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்தியா ஒரு அயல் நாடும் சிறிலங்காவின் அரசியலில் வரலாற்று ரீதியாகத் தொடர்புபட்டும் இலங்கைத்தமிழருக்கும் தமிழ் நாட்டு தமிழர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பும் கலாச்சார ஒற்றுமையும் வியாபித்துள்ளது.

சிறிலங்கா அரசும் அதனது இனவாதக்கட்சிகளுக்கும் இந்நீண்ட உறவைப்பிளவுபடுத்தவும் இந்திய இலங்கைத்தமிழரின் உறவு முறையைப்பிளவுபடுத்தவும் இலங்கை-இந்தியத் தமிழர்கள் அவர்களுடைய அரசியல் வெற்றியை அடைவதைத் தடுக்கும் நடவடிக்கைக்கும் ஒன்று சேர்ந்துள்ளன.

இச்செயற்பாட்டின் ஒரு பகுதியாக 1987 இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது. சிறிலங்காவின் அரச தலைவர்கள் இந்தியர்களைக் கொண்டு வந்து அவர்கள் மூலமாக இலங்கைத் தமிழருக்கெதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்தியத் தலைவர்கள் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு இந்தியர்களால் இலங்கைத் தமிழர்கள் அழிக்கப்படுகின்ற துரதிர்ஷ்டவசமான நிலைமையைத் தடுக்க வேண்டும் இந்திய இலங்கைத் தமிழர்களிற்கிடையிலான உறவு தொடர்ச்சியாக விருத்தியடைய வேண்டும் பாதுகாப்பு புரிந்துணர்வை உறுதிப்படுத்தும் உறவு உருவாக்கப்பட வேண்டும்.

எமக்குள் நெருக்கமான உறவை பேணுவதுடன் ஒரு பாதுகாப்புச் சூழலை உருவாக்குவதுடன் எமது கலாச்சாரம், தன்மைகளுடன் விரிவடைந்த உறவை உருவாக்க வேண்டும் நாம் சிங்களவரின் யுத்த தந்திர நடவடிக்கையையும் உபாயத்தையும் உணரவேண்டும் இந்திய இலங்கைத் தமிழர்களும் பொருத்தமான புரிந்துணர்வைக் கட்டியெழுப்ப வேண்டும் இது ஈழத்தமிழரின் அவா.பலாலிப் பகுதி பெரிய விமானத்தளமாகப் புதுப்பிக்கப்படுவதை இந்தியா கண்டிக்க வேண்டும். இப்பகுதி உயர் பாதுகாப்பு வலயம் எனச் சாக்குப் போக்குச் சொல்லி சொந்தமாகக் கவர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. இந்தியா உடனடியாக பலாலி விமானப்படைத்தள விஸ்தரிப்பிற்கு இலங்கைக்கு உதவி வழங்குவதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் பலாலி, திருகோணமலை ஒப்பந்தங்களின் மூலம் இந்திய இலங்கைத் தமிழர்களிடையே பகைமையை ஏற்படுத்துவதற்கு சிறிலங்கா அரசு முயற்சிக்கின்றது.

இந்தியா இதை உணர்ந்து கொண்டு தமது அடிப்படை உரிமைகளிற்காகப் போராடும் ஈழத் தமிழர்களிற்கு ஒரே குரலில் ஆதரவு வழங்க வேண்டும். இந்தியாவும், இந்திய அரசும் தமிழ் இனத்தின் உணர்வுகளிற்கு மதிப்பளிக்குமென நாம் எதிர்பார்க்கிறோம். எனவே சிறிலங்கா அரசியல் வாதிகளின் தந்திர ஏமாற்றுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கு வதிலிருந்து விலகவேண்டும் எனவும் எமது உணர்வுகளிற்கு மதிப்பளித்து எமது உறவைப் பேண வேண்டும் எனவும் பணிவாக வேண்டுகின் றோம எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செயலமர்வு

யாழ்.தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான கணிப்பீட்டுச் செயலமர்வு ஒன்று இன்று யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காலை தொடக்கம் மாலை வரையில் இடம்பெறவுள்ள இச் செயலமர்வில் அனைத்து ஆசிரியர்களையும் பங்குபற்றி பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (33)

## வடமராட்சி பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

மாவீரர் நாளை முன்னிட்டு வடமராட்சியில் கிராம வலய கோட்ட பிரதேச ரீதியாக மாவீரர்கள் பெற்றோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பிரதேச ரீதியாக 25 ஆம் திகதி கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியிலும் மறுநாள் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், கோட்ட ரீதியாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் மாவீரர்கள் பெற்றோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கிராம வலய ரீதியாகவும் இவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர். மாவீரர் நாளன்று மாவீரர்களின் பெற்றோர்களுக்கு இரண்டாயிரம் தென்னை மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. இதேவேளை வட்மராட்சி கடற்றொழிலாளர் சங்கங்கள் தமது பிரிவில்உள்ளமாவீரர்கள் பெற்றோரை கௌரவிக்கவுள்ளனர் (45)

## 10 வருடங்கள் பணியாற்றியோருக்கு ஓய்வூதிய அதிகரிப்பு இல்லை

பத்துவருடங்கள்அரச திணைக்களங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த ஓய்வூதியம் வழங்கப் பட மாட்டாதென ஓய்வூதிய பிரிவு வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. முப்பது வருடங்கள் சேவையாற்றியவர்களுக்கு எண்பத்தைந்து வீதத்திற்கு மேலும் இருபத்தைந்து வருடங்கள் சேவையாற்றியவர்களுக்கு எழுபது வீதத்திற்கு மேலும் பதினைந்து வருடங் கள் சேவையாற்றியோருக்கும் அதிகரித்த ஓய்வூதியம் வழங்கப்படுமெனவும், பத்து வருடங்களுக்கு சேவையாற்றி ஓய்வு பெற்றவர்களுக்குஅதிகரித்த ஓய்வூதியம் வழங்கப்படாது எனவும் தெரியவந்ததையடுத்து பத்து வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்ற பல ஓய்வூதியர்கள் விசனமடைந்துள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் விடயத்தில் யாழ். அரச அதிபர் யாழ். ஓய்வூதியர் சங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்பந்தப்பட்டோர் வேண்டுகை விடுத்துள்ளனர். (45)

## கரவெட்டிப்பிரதேசத்தில் வீதி புனரமைப்பிற்கு நிதி

கரவெட்டிப்பிரதேச செயலகத்திற்குட்பட்ட வீதிப்புனரமைப்புக்கென துரித அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் நிதி வந்து சேர்ந்துள்ளதாக கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் எ.எம்.ஜோசெப் தெரிவிக்கின்றார். இத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ள வீதிகளுக்கான நிதிகளாவன கப்புதூ விராளி வீரகத்திப்பிள்ளையார் கோவில் வீதிக்கு பதினைந்து இலட்சம் ரூபாவும், வதிரி பூவர்கரவை விநாயகர் வீதிக்கு நான்கு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவும், வதிரி துலாக்கட்டு இரும்புமதவடி வீதிக்கு இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா நிதியும் வந்து சேர்ந்துள்ளது. எனவே இவ் வீதிப்புனரமைப்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. (கா)

### -கோப்பாய் -கைதடிவீதி-

## கற்கள் பறிக்கப்பட்டும் புனரமைப்புச் செய்யாத நிலை

யாழ்.கோப்பாய்-கைதடி வீதி நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுகிறது.

பெரும் குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ் வீதியில் மழைவெள்ளம் தேங்கி நிற்பதனால் இவ் வீதியால் பயணிப்போர் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.இது குறித்து .மக்கள் உரிய தரப்பினரிடம் சுட்டிக்காட்டியதையடுத்து அதனைப் புனரமைக்க வென வீதி ஓரங்களில் கற்கள் பறித்து குவிக்கப்பட்டு பல மாதங்களாகி விட்டபோதும் அதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## விசாரணைக்காக நீதிமன்றம் அழைத்துச் செல்கையில் தப்பிச் சென்றவர்களில் ஒருவர் சரண்

கடந்த 16ஆம் திகதி செவ்வாய்க் கிழமையன்று விசாரணைக்கென பருத்தித்துறை நீதிமன்றிற்கு யாழ். சிறைச்சா லையிலிருந்து அழைத்து வரப்பட்டவேளை தப்பித்துச்சென்ற கைதிகள் இருவரில் ஒருவர் சரணடைந்துள்ளார்.

துன்னாலைப்பகுதியைச் சேர்ந்தவரான பழனி சுமன் என்பவரேநெல்லியடி பொலிசாருடாக பருத்தித்துறை நீதிமன்றில் சரணடைந்துள்ளார். சரணடைந்த நபரை மீண்டும் யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க நீதவான் க.அரியநாயகம் உத்தரவிட்டுள்ளார். இதனிடையே சம்பவ தினத்தன்று தப்பித்துச்சென்றிருந்த மற்றைய கைதியினை கைது செய்யும் நடவடிக்கையினை நெல்லியடி பொலிசார் முடுக்கிவிட்டுள்ளனர்.

வடமராட்சியின் கப்புதூ உள்ளிட்ட பல பகுதிகளிலும் இடம்பெற்ற பல இலட்சம் ரூபாபெறுமதியான பணம்,நகை மற்றும் உடமைகள் கொள்ளை தொடர்பாக கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் விசாரணைக்கென பருத்தித்துறை நீதி மன்றிற்கு அழைத்து வரப்பட்டிருந்த வேளையில் தப்பித்திருந்தது தெரிந்ததே. (27)

## தனியார் காணிகளில் வாழும்குடும்பங்களை நலன்புரி நிலையங்களாகப் பதிய மறுப்பு

(நல்லூர்)

சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம் பெயர்ந்து தனியார்காணிகளில் தற்காலிகக் கொட்டில் அமைத்து வாழும் சில குடும்பங்களை நலன்புரி நிலையங்களாகப் பதியமுடியாதென கிராம அலுவலர்கள் மறுத்து வருவதாக நலன்புரிநிலையங்களின் சமாசம் பிரதேச செய்லாளர்கள், அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக சொந்த இடங்களை இழந்து அகதி வாழ்வு வாழும் இம் மக்களுக்கு நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளையும் கூட வழங்க மறுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இடம் பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் இத்தகைய அலுவலர்களின் நடவடிக்கையினால் மேலும் துன்பங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருவதாகவும் உரிய அதிகாரிகள் இவ் விடயத்தில் கூடிய கவனம் எடுத்து இடம் பெயர்ந்த மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என யாழ்.மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தலைவர் ந.கணேசு உரிய அதிகாரிகளை வேண்டியுள்ளார். (41)

## அடைமழை காரணமாக உதயசூரியன் கிராம மக்கள் பாதிப்பு

யாழ். குடாநாட்டில் பெய்து வரும் அடைமழை காரணமாக தென்மராட்சியில் உள்ள உதயசூரியன் கிராம மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

உதயசூரியன் கிராமத்தில் மக்கள் குடியேறி வாழ்வதற்கு உகந்த மேட்டு நிலப்பகுதி தென்மராட்சி இராணுவ அதியுயர் பாதுகாப்புவலயம் என்ற பெயரில் மக்கள் குடியேற தடை விதிக்கப்பட்ட பிரதேசமாக உள்ளதால் அப்பகுதிகளில் உள்ள தாழ்வான பகுதிகளிலேயே மக்கள்தற்கால குடியிருப்புக்களை அமைத்து அவற்றில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் இப்பகுதிகளில் பெய்யும் அடை மழை காரணமாக மக்களின் தற்காலிக குடிசைகளுக்குள் மழை வெள்ளம் உட்புகுந்துள்ளமையால் இப்பகுதியைச் சேர்ந்த 25 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

அத்துடன் அப்பகுதியில் தொடர்ந்து இடம் பெயராது வாழ்ந்து வரும் மக்கள் குடிநீர்,மலசல கூடம் போன்ற வசதிகள் இன்றி பெரும்இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்(33)

## யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு இலவச கணினி கற்பித்தல் நிலையம்

### - யுனிசெவ் உதவியுடன் அமைக்க ஏற்பாடு

(யாழ்பாணம்)


யாழ்.மாவட்டத்தில் உள்ள தென்மராட்சி, வடமராட்சி வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் பாடசாலை மாணவர்களுக்கான இலவச கணினி கற்பித்தல் நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள இக் கணினி மையங்களில் அவ்வப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் இணைந்து இலவசமாக கணினி கற்கைநெறிகளைத் தொடர ஏற்பாடுகள் செய்யப்படும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்தி மற்றும் கணினி அறிவு என்பவற்றின் மேம்பாடுகளை கவனத்தில் கொண்டே இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இத்திட்ட அமுலாக்கலுக்கான ஆலோசனைகள் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (33)

# அமெரிக்கத் தேர்தலின் பின் தீவிரமாகிய ஈராக் மீதான தாக்குதல் காட்டுவது என்ன?

அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் வெற்றியின் பிரதிபலிப்பு தற்போது ஈராக்கில் தெரிகிறது. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றெனவும் கூறலாம். அதாவது கடந்த சில வாரங்களாக ஈராக்கின் தீவிரவாதிகள் கைகளில் இருக்கின்ற பலூஜா நகரை அமெரிக்கக் கூட்டுப்படைகள் கைப்பற்றுவதற்கான மிகமூர்க்கமான சண்டைகள் அங்கு நடை


அமெரிக்க சனாதிபதி புஷ்

பெற்று அழிவுகள் அறு[illegible]டையாகக் கிடைக்கப் பெற்றுள்ளன.

அமெரிக்க ஏகாதிபத்திய கொள்கையின் புதல்வனாக தேர்தல்களத்தில் இறங்கிய ஜோர்ஜ் புஷ்ஷும், புஷ்ஷின் ஏனைய நாடுகள் மீதான தலையீட்டை எதிர்ப்பவராக தேர்தலில் போட்டியிட்ட ஜோன் கெரியும் இரு வேறு துருவங்களாக தமது பிரச்சாரங்களை முடுக்கி விட்டிருந்தனர்.

ஏகாதிபத்தியமா? தன்நாட்டு நலனா? எது தமக்குத் தேவை என்ற நிலையில் தமது தலைவரைத் தேர்தெடுத்த அமெரிக்க மக்களின் தீர்ப்பில் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மீண்டும் சனாதிபதியாக்கியிருப்பதன் மூலம் அமெரிக்க மக்களின் வல்லாதிக்க மனப்போக்கு தெரிகிறதா அல்லது ஜோர்ஜ் புஷ்ஷின் கவர்ச்சிகரமான பிரசாரங்களால் மக்கள் மயக்கப்பட்டார்களா எனத் தெரியவில்லை.

உலகப் பயங்கரவாதத்தை அடக்கக்




கூடிய ஒரேஒரு தலைவன் தான்தான் எனவும் ஈராக்கை பணியவைத்த வீர புருஷன் தானே எனவும் பயங்கரவாதத் தாக்குதலில் இருந்து அமெரிக்காவைப் பாதுகாக்க தன்னால் மாத்திரமே முடியும் எனவும் தனது பரப்புரைகளை முன்னெடுத்த ஜோர்ஜ் புஷ்ஷின் வெற்றியானது அரபுலகிற்கும் மற்றும் மூன்றாம் உலக நாடுகள் பெரும்பாலானவற்றிற்கும் வயிற்றில் புளியைக் கரைக்கும் விடயமாகவே அமைந்திருக்கிறது. குறிப்பாக ஈராக் மக்களின் நிலை அந்தோ பரிதாபம் தான்" என்ற நிலைக்கு ஆளாகிவிட்டது.

அமெரிக்க சனாதிபதித்தேர்தல் முடிவுகள் வெளியாகி 4நாட்களுக்குள் ஈராக்கில் அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அடுத்த படியாக ஈராக்கியர்களின் சுயஆட்சிப்பகுதியாக இருந்துவரும் பலூஜா நகரம் அமெரிக்கக் கூட்டுப்படைகளின் தாக்குதலால் அழிவுகளைக் கண்டுள்ளது மட்டுமல்ல அங்கு அமெரிக்கக் கூட்டுப்படைகள் உயிர் சேதங்க்ளுக்கு மத்தியில் பலூஜா நகரை தாம் கைப்பற்றி விட்டதாக அறிவித்திருக்கிறது. தமது தரப்பில் 38 இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 320 பேர்வரை காயப்பட்டிருப்பதாகவும் அமெரிக்கா அறிவித்திருக்கிறது. அத்துடன் ஆயிரத்திற்கு மேற்பட்ட தீவிரவாதிகளைத் தாம் கொன்றிருப்பதாகவும் அறிவித்திருக்கிறது.

சில செய்தி நிறுவனங்களின் தகவல்களின்படி பலூஜா நகர்மீதான அமெரிக்கக் கூட்டுப்படைகளின் தாக்குதலின் போது சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம் பெயர்ந்திருப்பதாகவும் பல நூற்றுக் கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டு அவர்களின் சடலங்கள் பலூஜா நகர் வீதிகள் எங்கும் சிதறிக் காணப்படுவதாகவும் தொண்டு நிறுவனங்களின் உதவிப் பொருட்கள் பொது மக்களை சென்றடைவதை அமெரிக்கப் படைகள் தடுத்துள்ளதாகவும் செய்திகள் வெளியிட்டிருக்கின்றன.

இப்படியான போர்க்கள காட்சிகள், அனைத்தும் அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் புதிய பதவி யேற்பிற்குப் பின் நடைபெற்று வருகின்றன என்பதுதான் இங்கு நோக்க வேண்டிய விடயம்.

2003 ஆம் ஆண்டு ஈராக்மீது படை எடுத்து ஈராக் நாட்டை தாம் கைப்பற்றி விட்டதாக அமெரிக்க கூட்டுப்படைகள் அறிவித்தபின் இப்படிப்பட்ட பெரும் தாக்குதல்கள் நாட்டிற்குள்ளேயே நடைபெறுவதானதுபல உண்மைகளை உலகிற்கு காட்டி நிற்கின்றன.

1.சதாம் ஹுசைன் தலைமையிலான ஈராக் அரசை அகற்றிவிட்டால் ஈராக்கை தமது முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடலாம் எனும் அமெரிக்காவின் எண்ணம் பொய்த்திருக்கிறது.

2அமெரிக்க கூட்டுப் படைகளால் கைப் பற்றப்படாத பல பகுதிகள் இன்றும் ஈராக் கில் உள்ளன என்பதும்.

3அந்நிய சக்திகளின் தலையீட்டை ஈராக் கியர்கள் எதிர்த்தே வருகின்றனர்.

4அமெரிக்கக் கூட்டுப் படைகளிற்கு ஈராக் தொடர்ந்தும் பெரும் சவாலாகவே இருக்கப்போகிறது.

இப்படிப்பட்ட களச்சூழ்நிலைகளில் புஷ்ஷின் தற்போதைய போக்கு எப்படிப்பட்ட நெருக்கடிகளை சந்திக்கப் போகின்றது என பார்க்க வேண்டும்.

இந்த நிலையில் அமெரிக்காவிற்கான ஆதரவை அமெரிக்க கூட்டு நாடுகள் தொடர்ந்தும் வழங்குமா என்ற நிலையினையும் பார்க்க வேண்டும். இந்த சந்தேகத்தை தீர்ப்பதற்கு அண்மையில் பிரான்ஸ் சனாதிபதி தெரிவித்திருக்கும் கூற்று இங்கு உதவலாம் எனத் தோன்றுகிறது. அதாவது "அமெரிக்காவின் ஈராக்மீதான தாக்குதலிற்கு உதவியதனால் தமக்கு எதுவித பலனும் இல்லை" என பிரான்ஸ் சனாதிபதி சிராக் தெரிவித்திருப்பதானது சில யதார்த்த நிலைமையினை உணர்த்திநிற்கிறது.

1. அமெரிக்காவின் தன்னிச்சையான போக்கை மௌனியாக நின்று எதிர்த்து வருகின்ற பெரும்பாலான மத்திய கிழக்கு நாடுகளினதும் மூன்றாம் உலக நாடுகளினதும். அணியில் பிரான்ஸ் இணைய வேண்டிய கட்டத்திற்கு சென்று விட்டது.

ஏனெனில் ஈராக்கில் நடைபெற்று வரும் ஆட்கடத்தல்கள் பெரும்பாலும் அமெரிக்காவிற்கு ஆதரவுவழங்கும் நாடுகளிற்கே பெரும் நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றன. இதனைப் பல நாடுகள் சண்டியனுக்கு மீசை முறுக்கி விடுவதை விட்டு விட்டு தமது உள் நாட்டில் மக்கள் எதிர்ப்பை சம் பாதிப்பதை தவிர்ப்பதையே விரும்பு கின்றன. இதனை மையமாக வைத்துத் தான் பிரான்ஸ சனாதிபதியின் கூற்று அமைந்திருக்கிறது

அடுத்தபடியாக ஈராக்கின் பலூஜா மீதான தாக்குதலை அமெரிக்க இடைக் கால அரசில் அங்கம் வகிக்கும் சன்னி முஸ்லிம் பிரிவு எதிர்த்திருக்கிறது. இந்த நிலையானது ஈராக்கில் தேசிய உணர்வு வலுப் பெற்றிருக்கிறது என் பதையே காட்டுகிறது.

> பல நாடுகள்சண்டியனுக்கு மீசை முறுக்கி விடுவதை விட்டு விட்டு தமது உள்நாட்டில் மக்கள் எதிர்ப்பை சம்பாதிப்பதை தவிர்ப்பதையே விரும்புகின்றன. இதனை மையமாக வைத்துத் தான் பிரான்ஸ சனாதிபதியின் கூற்று அமைந்திருக்கிறது.


ஈராக்கின் சன்னி முஸ்லிம் பிரிவினரை


பலூஜாவில் நடைபெற்ற அமெரிக்கப் படைகளின் தாக்குதலின் போது

பொறுத்த வரையில் இவர்கள் சதாம் ஹுசைன ஆட்சிக்காலத்தில் பல இன்னல்களை அனுபவித்தவர்கள். அந்த நிலையில்தான் இவர்கள் அமெரிக்காவின் ஈராக் மீதான தாக்குதல்களை ஆதரித்ததுடன் சதாமை ஓரம் கட்டும் போரில் அமெரிக்க கூட்டு படைகளுடன் இணைந்து செயற்பட்டனர். இப்படிப்பட்ட சன்னி முஸ்லிம் பிரிவினரின் எதிர் நிலைப்பாடுகள் அமெரிக்காவிற்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்தபடியாக அமெரிக்காவின் உயர் அமைச்சு பதவிகளை வகித்தவர்களின் பதவிவிலகல்கள் இடம் பெற்று வருகின்றன. இதில் முக்கியமாக அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சராக் இருந்து வந்த கொலின் பவலின் பதவி விலகலானது புஷ்ஷின் நிர்வாகத்திற்கு நெருக்கடியைக் கொடுக்கும் ஒன்றாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

கொலின் பவலைப் பொறுத்தவரை உலகறிந்த ஒரு அரசியல்வாதி ஏனெனில் அமெரிக்க கூட்டுப்படைகளின் ஈராக் மீதான தாக்குதலுக்கு காரணமாக அமைந்த ஈராக் தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை வைத்திருக்கிறது என்ற குற்றச்சாட்டை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றி பொய்யான ஆதாரங்களை சமர்ப்பித்த சர்ச் சைக்குரிய கொலின்பவல்


கொலின் பவல்
AP

பின்னாளில் அவரது கூற்று பொய்த்தமையினால் பெரும் விமர்சனத்திற்கு உள்ளானவர். இதனால் இவரது பெயருக்கு பெரும் களங்கம் ஏற்பட்டது. இப்படிப் பட்ட புஷ்விசுவாசியான கொலின்பவ லின் பதவிவிலகல் அமெரிக்க வெளியுறவுத்துறைக்கு பெருமிழப்பாகவே அமையும். கொலின்பவல் இன்னுமொருவிடயத்திலும் அமெரிக்க நிர்வாகத்திற்கு முக்கியமானவர் அதாவது கொலின் பவலுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் கொபி அனானுக்கும் இடையே நெருக்கமான உறவு ஒன்று உண்டு. இதன் காரணமாக அமெரிக்காவிற்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையிலான உறவு கொலின் பவலால் மேலும் இறுக்கமானதாக இருந்து வரும் காலங்களில் இந்த நிலை தொடருமா என்பதும் சந்தேகமே.

இப்படியான புற அக நிலை சூழலால் இறுக்கப்பட்டு நிற்கும் புஷ் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் தமது தலையீட்டை எப்படியும் முன்கொண்டு செல்லவே எத்தனிக்கும் ஏனெனில் இது அமெரிக்காவின் கௌரவ பிரச்சினை, தொடர்ந்து வந்த அதிகார நிலையில் தொடர்ந்தும் அமெரிக்காவை வைத்திருப்பதற்கான ஆணையினை அமெரிக்க மக்கள் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு வழங்கி இருக்கிற நிலையில் புஷ்ஷின் அடுத்தகட்ட நகர்வுகள் புறநிலை சார்ந்திராது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இதற்கு ஈராக் கில் நடைபெற்று வரும் தொடர் தாக்குதல்கள் நல்ல உதாரணம்.

முத்தையனூரார் – ப.துஸ்யந்தன்

# வரவு செலவில் பற்றாக்குறை நீக்க — அரசாங்கத்தின் திட்டம் குறித்து சந்தேகம்

ஐக்கிய சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் ஒருவாறாக வெளியிடப்பட்டுவிட்டது. அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு மக்களுக்கு விலைவாசி ஏற்றத்திலிருந்து நிவாரணம் என்பன கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் பெரிதாக எந்த மாற்றத்தையும் இந்த வரவு செலவுத் திட்டம் கொண்டு வருவதற்கான அறிகுறி எதனையும் கொண்டிருக்கவில்லை.

கடந்த சில மாதங்களில் ஏற்பட்ட விலைவாசி உயர்வுடன் ஒப்பிடுகையில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு அல்லது அத்தியாவசியப் பொருட்களுக்கான வற்வரிக் குறைப்பு என்பன பெரும்மாற்றத்தை ஏற்படுத்தாது. அதிலும் அரச ஊழியர்களுக்கு 70 சதவீத சம்பள அதிகரிப்பு மூன்று மாதங்களில் வழங்கப்



படும் என அரசாங்கம் உறுதியளித்திருந்தது. ஆனால் 8 மாதங்களின்பின் சுமார் 20% அதிகரிப்பும் 20 மாதங்களின் பின்பும் 20% அதிகரிப்புமே வழங்குவதாக அரசாங்கம் அறி வித்துள்ளது. அதேவேளை அரசாங்க ஊழி யருக்கு தினமும் ஒரு மணி நேர வேலை அதிகரிப்பு அறிவிக்கப்பட்டதன் மூலம் மாதமொன்றுக்கு இரண்டரை நாட்கள் கூடுதலாக வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை மேலதிக நேரவேலையாக கணிப்பீடு செய்யின் சுமார் மூன்றேமுக்கால் நாட்கள் வேலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த அரசாங்க ஊழியர்களுக்கான வேலை நேர அதிகரிப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த அரசாங்க ஊழியர் ஒருவர் இன்று அரசாங்கத் திணைக்களங்கள் எதிலுமே நிர்வாகம் சரிவர இல்லை எட்டு மணிநேர வேலையின் போதே ஊழியர்கள் சரிவர வேலை செய்வதில்லை. எனவே ஒன்பது மணிநேர வேலையால் பயன் என்ன? எனக் கேள்வியெழுப்பியுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட அரச ஊழியர்கள் மட்டில் இவ்வாறான கண்டனங்களை எழுப்பி வந்திருக்கிறார். அவரது கடந்த ஆட்சிக் காலத்தில் மேலதிக வேலை நேரத்தில் பலகட்டுப்பாடுகளை விதித்திருக்கிறார்.

மிக அண்மையில் கூட அமைச்சர் ஒருவர் உலகிலேயே அதிக விடுமுறைகளைக் கொண்ட நாடு சிறிலங்காதான் என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே 70 வீத சம்பள அதிகரிப்பு என தேர்தலின் போது வாக்குறுதி வழங்கிய சனாதிபதி இப்பொழுது அதில் பல வெட்டுக்களையும் மேலும் அதிகரித்த தொகைக்கு வேலை நேர அதிகரிப்பையும், ஏற்படுத்தியுள்ளதாகவே அரசாங்க ஊழியர்கள் பலரும் கருதுகின்றனர்.

இதேவேளை 9 மணி நேரமாக வேலைநேரம் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு ரணில் விக்கிரமசிங்க தொழிலாளர்களின் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டுள்ளதாகவும். அதற்கெதிராகப் போராடப் போவதாகவும் கூறியிருக்கிறார். ஆனால் பாட்டாளிகளின் தோழர்களான ஜே.வி.பி.யினர் இது குறித்து இதுவரை வாய்திறக்கவில்லை. எவ்வாறாயினும் அரச ஊழியர்களுக்கு தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டுள்ளமை வெளிப்படையாகியுள்ளது.

இதேவேளை இம்முறை பாதுகாப்புச் செலவினமாக 7600 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை இங்கு கவனத்திற்குரியதாகும். இது குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடும் விசனம் தெரிவித்துள்ளது. சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இக்கால கட்டத்தில் பாதுகாப்புச் செலவினமாக இவ்வளவு தொகைப்பணத்தை ஒதுக்க வேண்டிய காரணம் என்ன? என்று கூட்டமைப்பினர் கேள்வி யெழுப்புகின்றனர். இதைவிட முக்கியமானதொரு விடயம் வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறையாகவுள்ள 17287.8 கோடி ரூபாவை எவ்வாறு அரசாங்கம் ஈடு செய்யப்போகிறது என்ற கேள்விக்குப் பதிலில்லாமையாகும்.

இதனை ஈடு செய்வதற்கு அரசாங்கம் குறுக்கு வழிகள் சிலவற்றை வைத்திருப்பதாக எதிர்க்கட்சிகள் ஏற்கனவே தெரிவித்திருந்தன. அதில் ஒன்று ரூபா நோட்டுக்களை அச்சிடுவது, இரண்டாவது அரசாங்கத்தின் சில உடமைகளை தனியாருக்கு விற்பதன் மூலம் பற்றாக்குறையைச் சமாளிப்பது என்பனவாகும். இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் கூற்று அரசாங்கம் பற்றாக்குறையைச் சமாளிக்க நாணயத்தாள்களை அச்சிட ஏற்பாடு செய்துள்ளது. என்பதாகும். இதனை அடிப்படையாக வைத்து பணவீக்கம் அதிகரிக்கும் வரவு-செலவுத்திட்டம் இது என சிறிலங் காவின் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரச துறைகள் சிலவற்றைப் பகுதியாகத் தனியாருக்கு விற்று அதன் மூலம் பற்றாக்குறையைச் சமாளிக்கும் நோக்கம் ஒன்றையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கொண்டிருக்கிறது. ஆனால் அதனை ஜே.வி.பி. அமைச்சர்கள் சிலர் எதிர்க்கின்றனர். குறிப்பாக அமைச்சர் லால்காந்த சனாதிபதியின் எச்சரிக்கையையும் மீறி, தனியார் மயமாக்கலுக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளார்.

ஜே.வி.பி. இவ்வாறானதொரு நிலைப்பாட்டைப் புதிதாக எடுக்கவில்லை. முன்னரே அதன் அடிப்படைக் கொள்கையின் படி தனியார்மயமாக்கலுக்கு எதிராக உள்ளது. இப்பொழுது அது தொடர்ந்தும் அதே நிலைப் பாட்டில் இருப்பது போன்று



தோன்றினாலும் அரசாங்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காகசில விட்டுக் கொடுப்புகளுக்கு முன்வரலாம் ஆனால் உடனடியாக வருவது சற்றுச் சிரமமானவிடயமே.

இப்பொழுது உதவி நாடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய பாரிய நிதி உதவி குறித்தும் சந்திரிகா அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்கின்றது. அது சமாதானப் பேச்சுவார்த்தைகளுடன் தொடர்புபட்டதாக உள்ளமையானது எவ்வாறாயினும் சமாதான நடவடிக்கைகள் குறித்துப் பேச வேண்டிய சூழல் இருப்பது சந்திரிகாவிற்கு தவிர்க்க முடியாததாகியுள்ளது.

இப்பொழுது சமாதான முயற்சிகளுக்குப் பெரிதும் முட்டுக்கட்டையாக இருப்பது சனாதிபதி சந்திரிகாவின் கூட்டரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.யினராகும். ஜே.வி.பியினரின் அடிப்படைவாதமேயாகும். அவர்கள் பேச்சுவார்த்தை பற்றி என்னதான் கூறிக் கொண்டு வந்தாலும் இப்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தை அல்லது பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு என்ற விடயத்திற்கு ஜே.வி.பி. இணங்கி வருவதுபோலக் காட்டிக்கொள்கிறது. ஆனால் விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகத் தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் பேச முயன்றால் அரசாங்கத்தை விட்டு விலகிச்செல்லப்போவதாக ஜே.வி.பி. பல தடவைகள் அறிவித்துள்ளது.

எனவே ஜே.வி.பி.இப்பொழுது மற்றொரு விடயத்திலும் விட்டுக் கொடுப்புக்கு முற்பட்டுள்ளது. அதாவது முன்னர் வெளிநாட்டுஉதவியின்றியே அரசாங்கத்தை நடத்த முடியும் எனக் கூறியது. ஆனால் இப்போது ஜே.வி.பி. வெளிநாட்டு உதவிகளை பெறும் முயற்சியில் ஒத்துழைக்கத் தயாராகவுள்ளமையையே வெளிப் படுத்துகிறது.

எவ்வாறாயினும் வரவு செலவு திட்டம் மக்கள் எதிர்பார்த்தபடி அமையாதது மட்டுமல்ல இப்பொழுது பற்றாக்குறையை ஈடுகட்டுவது தொடர்பாகவும் சிக்கலை எதிர்கொள்கிறது. இதனை நிவர்த்திசெய்ய நேர்வழியைக் கையாளுமா அல்லது குறுக்குவழியில் சென்று மக்களை மேலும் துன்பத்தில் ஆழ்த்துமா.

**வேலவன்**

—மின்சாரத்தில் அகப்பட்டு மரணமானோரின்

## உடலை அகற்ற முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டோருக்குப் பிணை

(நல்லூர்)

மின்சாரத்தில் அகப்பட்டு மரணம்அடைந்த இருவரின் உடல்களை அகற்ற முற்பட்ட குற்றச்சாட்டின் பெயரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரு பெண்களும் நேற்று முன்தினம் பிணையில் செல்வதற்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி. சறோஜினி இளங்கோவன் அனுமதித்துள்ளார்.

உடுவில் மல்வம் பகுதியில் உள்ள கோழிப்பண்ணையொன்றில் அதிகாலை நேரம் மின்சாரத்தில் அகப்பட்டு க.மோகன், பாபுஎன்ற இருவரும் மரணம் அடைந்தனர்.

இவ்விருவரின் உடல்களையும் பொலிசாருக்கோ நீதிமன்றத்திற்கோ தகவல் தெரிவிக்காமல் உரிய இடத்தில் இருந்து எடுத்துச் செல்ல முற்பட்டமை மற்றும் உரிய இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு நகர்த்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பெயரில் நாகேந்திரம் யோகராணி, சண்முகம் சுலக்ஷனா ஆகிய இரு பெண்களும் நீதிமன்ற உத்தரவின் பெயரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இவ்விருவரும் நேற்று முன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்த இருவரினதும் மரணம் சம்பந்தமான சட்சியங்கள் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் இடம்பெறும் மரணவிசர ணையில் பதிவு செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் (41)

## யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி அதிகாரிகள் நலன்புரி நிலையங்களைப் பார்வையிட்டனர்

(நல்லூர்)

யாழ் மாவட்ட செயலக புனர்வாழ்வுப் பகுதிதிட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

கடந்த 18ஆம் திகதி இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாச நிர்வாக சபைக்கும் திட்டப்பணிப்பாளருக்கும் இடையில் நலன்புரி நிலையங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் நலன்புரி நிலையங்களின் சமாச உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும இடையே நலன்புரி நிலைய மக்களின் தற்போதைய நிலமை சம்பந்தமாக இடம்பெற்ற சூடான வாதப் பிரதிவாதங்களைத் தொடர்ந்து உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக சமாச உறுப்பினர்கள் தெரிவிக்கின்றார்கள்.

கடந்த 18 ஆம் திகதி உடுவில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுகளில்அமைந்துள்ள நலன்புரி நிலையங்களுக்கு அரச அதிகாரிகள், நலன்புரி நிலையங்களின் சமாச உறுப்பினர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் சென்று பார்வையிட்டுள்ளனர்.

19 ஆம் திகதி சண்டிலிப்பாய் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள முகாம்களுக்கும் சென்றுபார்வையிட்டுள்ளனர்.

நலன்புரி நிலைங்களில் வசிக்கும் மக்கள் தமது நிலமையை எடுத்துக்கூறியதுடன் சில நலன்புரி நிலையங்களின் அதிகாரிகளுக்கும் மக்களுக்குமிடையில் வாக்குவாதங்கள் இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது. (41)

- கடற்புலிகளின் -

## முல்லை மாவட்டத்திற்குட்பட்ட மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

கடற்புலிகளின் முல்லை மாவட்டத்திற்குட்பட்ட மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மாத்தளன் தொடக்கம் நாயாறுவரையான மாவீரர்களின் பெற்றோர்கள் இன்று கௌரவிக்கப்படவுள்ளதாக கடற்புலிகளின் முல்லைத்தீவு பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் அரவிந்தன் தெரிவித்துள்ளார். (20)

# நோர்வே அனுசரணை குறித்து உடன் தீர்மானிக்கக்கூடாது

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பான சமாதான நடைமுறைகளில் நோர்வே அனுசரணையாளராகச் செயற்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்ட யோசனை குறித்து அவசரப்பட்டு எதுவித தீர்மானமும் எடுக்கப்படக்கூடாதென்று அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் விடுத்த விசேட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இறைமையுள்ள இரண்டு நாடுகளின் அரசாங்கங்களிற்கிடையே எவ்வித கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இராஜதந்திர முறையில் அணுகப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் சமாதான நடைமுறைகளில் இரு அரசாங்கங்களுக்குமிடையிலான கருத்து வேறுபாடுகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்றும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும், விடுதலைப்புலிகளை சமாதான நடைமுறைகளுக்குக் கொண்டு வருவதில் தமது அரசாங்கத்திற்கு நோர்வே அரசாங்கம் பயனுள்ள பங்கை ஆற்றி வருவதாக சனாதிபதி சந்திரிகா தெரிவித்திருப்பதாகவும் அமைச்சர் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமாதான நடைமுறைகளில் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையாளர் பங்கு குறித்து சங்கைக்குரிய அத்துரலியரத்ன தேரர் சமர்ப்பித்த பிரேரணை மீதான விவாதத்தின்போது அமைச்சர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்தார்.

நோர்வேயை அனுசரணையாளர்நிலையிலிருந்து நீக்கிவிடுமாறு சங்கைக்குரிய ரத்தின தேரர் இந்த யோசனையில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உரையாற்றுகையில், வடக்கு-கிழக்கு பிரச்சினை பேச்சுவார்த்தையை மூலம் தீர்த்து வைக்க அரசாங்கம் தயாராக இருக்கிறதென்றும், சகல சமூகத்தவர்களுக்கும் ஏற்ற வகையில் தீர்வு காணப்பட வேண்டும். முன்னைய அரசாங்க காலத்தில் நோர்வே அனுசரணையாளர்களுக்குப் பதிலாக மத்தியஸ்தராகவே செயற்பட்ட தென்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார். இதனாலேயே பிரச்சினைகள் எழுந்தன வென்றும் தெரிவித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கையில், இரு தரப்பினருக்குமிடையே சந்தேகம் இருப்பதனால் நோர்வேயின் பங்களிப்பு அவசியமானதென்று விளக்கிக் கூறினார்.

# பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காவிட்டால் மீண்டும் யுத்தம் ஏற்படும் அபாயம்

## சிவாஜிலிங்கம் பா.உ பாராளுமன்றில் தெரிவிப்பு

பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்காவிட்டால் மீண்டும் யுத்தம் ஏற்படும் அபாயம் உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், இவ்வாறு யுத்தம் ஏற்பட்டால் தனிநாடு உருவாவதை தடுக்கமுடியாது எனத் தெரிவித்தார். சனாதிபதிக்கு உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனினும் அதனை நழுவ விட்ட நிலையில் யுத்தம் ஏற்படுமானால் தற்சமயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த முடியாமல் போய் விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் இங்கு உரையாற்றுகையில், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் தயாராக உள்ள போதும் புலிகளே பின்னடித்து வருகிறார்கள் எனக் குறிப்பிட்டார். இதன் போது எழுந்த ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் நாட்டின்பிரிவினைக்கு எதிராக சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு தற்சமயம் பிரிவினையைப் பற்றி பேசுவது ஏற்புடையதல்ல என அவர் தெரிவித்தார் (32)

# பின்தள்ளப்பட்டிருந்த மக்களை வாழவைப்பதற்கா வரவு செலவுத்திட்டம்

## ஜே.வி.பி.பா.உ. விமல்வீரவன்ச தெரிவிப்பு

சமூகத்தில் பின்தள்ளப்பட்டிருந்த மக்களை வாழவைப்பதற்காகவே இம்முறை வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தவரவு செலவுத்திட்டம் மக்களை உற்பத்தித் துறையில் ஈடுபடுத்துவதற்காகவே ஐந்து வருடகால வரி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவிக்கையில், தமது கட்சியின் நிலைப்பாட்டிற்கு முற்றிலும் ஒத்துவராத போதிலும் இம்முறை வரவு செலவுத்திட்டம் பெறுமதிமிக்கதொன்றெனக் கூறியுள்ளார்.

# வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க மு.கா. தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்து வாக்களிக்கப் போவதாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்துரைத்துள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தென்மாகாணத்தை மாத்திரம் இலக்காகக் கொண்ட இந்த வரவு செலவுத்திட்டம் வடக்கு கிழக்கை முழுமையாகப் புறக்கணித்துள்ளதாக தெரிவித்துள்ளது. அதேநேரம் தென்கிழக்கு பல்கலைக்கழகம் தொடர்பாக இந்த வரவு செலவுத் திட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படாமை வருந்தத்தக்கது எனவும் இந்த நிலையில் இதனை எதிர்த்து வாக்களிக்கப்போவதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. (32)

**- மட்டு. காத்தான்குடியில் -**

# இஸ்லாமிய தீவிரவாதிகளால் கல்லறைகள் அடித்துச் சேதம்


மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் அதிகாலை மௌலானா கபுறடி' இஸ்லாமிய அடிப்படைவாதிகளினால் அடித்து நொருக்கப்பட்டு தரை மட்டமாக்கப்பட்டுள்ளது.

ஒரு நூற்றாண்டிற்கு மேல் பழமை வாய்ந்த மௌலானா சமாதியின் 5 கல்லறைகள் (கபுறடிகள்) வைக்கப்பட்டுள்ளன. இஸ்லாமியரில் ஒரு பகுதியினர் இந்த கபுறு வழிபாட்டை ஏற்றுக் கொண்டாலும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் இதனை முற்றாக நிராகரிக்கிறார்கள். கடந்த மாதம் இஸ்லாமிய மதக் கோட்பாடுகள் தொடர்பாக இப் பிரதேசத்தில் வன்முறைகள் வெடித்தன. இவ்விடயத்தில் சுமுகமான தீர்வு காணப்பட்டு அமைதி நிலவி வந்தது. இப்படியான சூழ்நிலையில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளினால் இந்தக் 'கபுறடி' கட்டடம் அடித்து நொருக்கி சேதமாக்கப்பட்டுள்ளது.

## வீர வணக்கம்

### 3ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில்
14 □ 11 □ 1953



தாயக மண்ணில்
21 □ 11 □ 2001

**தமிழீழத் தேசியத்துணைப்படை வீரர்**

**இராசு**

**குமரப்பிள்ளை இராசு**

நி.மு. 08 ஆம்வாய்க்கால் உருத்திரபுரம்
கிளிநொச்சி

த.மு. தும்புறுவில் குடியிருப்பு ஜெயபுரம்

2001.11.21 அன்று வெடிவைத்தகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும் இந் நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீர்களுக்கும் எமது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்"

(5291)

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாய் மடியில் முத்தாக
08 12 1979



தாயக மண்ணில் வித்தாக
21 11 2000

**கப்டன் சரவணன்**

[பெருமாள் சூரிய மூர்த்தி]

மன்னார் 11 ஆம் கட்டைப் பகுதியில் இராணுவத்துடனான மோதலில்

தமிழ் ஈழத்தாயின்
மண் தாகம் தீர்க்க
தன் வாழ்வை அளித்திட்ட
தமிழ் வீர மறவன் உன்
தியாகத் தீ அணைந்து இந்
நாளின் நான்காண்டு
நிறைவுதனில் உந்தன்
நினைவுகளில் உறைந்து நிற்கும்.

3/3, உழவன் ஊர்,
தருமபுரம்.

(5290)

உன் குடும்பத்தினர்,
மற்றும் உறவுகள்.

# கால எல்லை நீடித்தல் பற்றிய அறிவித்தல்

, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் -2005 ஆம் ஆண்டுக்கான சந்தைகள் இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள் ஆகியவற்றுக்கான கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடித்தல்.

மேற்குறிப்பிடப்பட்டவற்றுக்கான கேள்விப்படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

குத்தகை சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தின் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| கேள்விப் படிவம் வழங்கப்படும் திகதி | 2004.11.24 பி.ப.2.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி | 2004.11.25 ந.ப.12.00 மணிவரை |
| கேள்விப்படிவம் திறக்கப்படும் திகதி | -2004.11.25.பி.ப.14.30 மணிக்கு |

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
2004.11.18

(சி10626)

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

# ஜெயேந்திரர் கைதை எதிர்த்து பாரதிய ஜனதாக்கட்சி நடவடிக்கை அப்துல்கலாமை சந்தித்து மகஜர் கொடுத்தனர்

(புதுடில்லி)

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டு இருக்கும் பிரச்சினை தொடர்பாக பாரதிய ஜனதா மூத்த தலைவர்கள் குழு நேற்று முன்தினம் மாலை டில்லியில் சனாதிபதி மாளிகைக்குச் சென்று சனாதிபதி அப்துல் கலாமைச் சந்தித்துப் பேசியது.

இந்தக் குழுவில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் துணைப்பிரதமர் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, ஜஸ்வந்த்சிங், சுஷ்மாசுவராஜ், பிரமோத்மகாஜன், அருண்ஜெட்லி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

ஜெயேந்திரரை பொலிஸ் காவலில் வைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்த பாரதிய ஜனதா தலைவர்கள் அவரை தமிழக அரசு ஒரு குற்றவாளியைப் போல் நடத்துவதாகவும் சனாதிபதியிடம் புகார் கூறினார்கள். மதத்தலைவர்கள் சம்பந்தப்பட்ட இது போன்ற பிரச்சினைகளைக் கையாள உரிய வழிகாட்டுதல்களை வழங்குமாறும் கேட்டுக்கொண்டனர். மேலும் இது தொடர்பாக சனாதிபதியிடம் அவர்கள் மனு ஒன்றையும் கொடுத்தனர். அந்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது ;

கிரிமினல் வழக்குத் தொடர்பான புகாரில் காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர் கைது செய்யப்பட்ட விதமும், அவர் காவலில் வைக்கப்பட்டதும் எங்களுக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஜெயேந்திரர் மீதான வழக்கின் தன்மை பற்றி பாரதிய ஜனதா விமர்சிக்க விரும்பவில்லை. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதால் சட்டம் தனது கடமையை செய்யட்டும். என்றாலும் இந்தப் பிரச்சினை தொடர்பாக நாட்டில் உள்ள கோடிக்கணக்கான இந்துக்களின் உணர்வுகளையும், கவலையையும் தங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

நீதிமன்றக் காவலில் வைத்து தன்னிடம் விசாரணை நடத்த முழு ஒத்துழைப்பு அளிப்பதாக ஜெயேந்திரர் கூறியுள்ள போதிலும் அவரை விசாரணைக்காக பொலிஸ் காவலுக்கு அனுப்பியதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். குற்றம் சாட்டப்பட்டிருக்கும் நிலையில் அவர் ஒரு கிரிமினல் குற்றவாளியைப்போல் நடத்தப்படுகிறார். பொலிஸ் காவலில் ஜெயேந்திரர் தவறாக நடத்தப்பட்டால் அதற்குத் தமிழக அரசு தான் நேரடி பொறுப்பு ஏற்க வேண்டும்.

அரசியல் நெருக்கடிகள் மற்றும் வற்புறுத்தல்களில் இருந்து காஞ்சிமடம் மற்றும் பிற அனைத்து மத நிறுவனங்களின் புனிதத் தன்மையும், கௌரவமும் காப்பாற்றப்படவேண்டும். இதற்கு உகந்த வழிகாட்டல் முறைகளை உருவாக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானுக்குஅமெரிக்கா நவீன ஆயுதங்கள் வழங்குவதை எச்சரிக்கிறது இந்தியா

பாகிஸ்தானுக்கு நவீன ஆயுதங்கள் வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்திருக்கும் கூற்றிற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.

பாகிஸ்தானுக்கு நவீன ஆயுதங்கள் வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதனால் இந்தியா அமெரிக்கா உறவில் பாதிப்பு ஏற்படும் என்று அமெரிக்காவிற்கு இந்தியா எதிர்ப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானுக்கு 8 போர் விமானங்களையும், பீரங்கிகளை அழிக்கும் ஏவுகணைகளையும் நவீன ஆயுதங்களையும் வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இந்நிலையில் இந்திய வெளியுறவுத் துறையை சார்ந்த ஒருவர் கருத்து தெரிவிக்கையில்;

இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளிற்கு இடையேயான உறவுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு நவீன ஆயுதங்களை வழங்க முடிவு செய்துள்ளது. இந்த முடிவால் இந்திய அமெரிக்கா இடையேயான நல்லுறவு பாதிக்கப்படுமெனத் தெரிவித்தார்.

# 8 பேர் சுட்டுக்கொலை

பீகார் மாநிலத்தில் குடிகார கான்ஸ்டபிள் ஒருவர் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றார். தடுக்க முயன்ற கிராம மக்கள் மீது அவர் சரமாரியாக சுட்டதால் நான்குபேர் பலியாயினர் கோபமடைந்த கிராம மக்கள் கலவரத்தில் ஈடுபட்டு பொலிஸ் புறக்காவல் நிலையத்தையும், ரயில் நிலையத்தையும் தீயிட்டு கொளுத்தினர். இதற்கிடையில் மற்றொரு இடத்தில் நடந்த தாக்குதலில் ஆளும் கட்சியான ராஷ்டிரீய ஜனதா தளத்தை சேர்ந்த மாவட்ட செயலாளர் உட்பட நான்கு பேர் குற்ற[illegible] கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

# வீரப்பன் கொலைச் சம்பவத்தில் தொடர்புடைய 42 அதிரடிப்படையினர் விசாரணைக்கு அழைப்பு

(சென்னை)

வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக தர்மபுரி ஆர்.டி.ஓ முன் ஆஜராக 42 அதிரடிப்படை வீரர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

தர்மபுரி அருகே உள்ள பாடியில் கடந்த மாதம் 18-ஆம் திகதி சந்தனக் கடத்தல் வீரப்பன் மற்றும் அவரது கூட்டாளிகள் 3 பேர் அதிரடிப்படை வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டமை தெரிந்ததே இது தொடர்பாக தர்மபுரி பொலிசார் வழக்குப் பதிவு செய்தனர் . இதனைத் தொடர்ந்து விசாரணை அதிகாரியாக தர்மபுரி ஆர்.டி.ஓ பிரகாசம் நியமிக்கப்பட்டார்.

இவர் தனது முதல் கட்ட விசாரணையை சம்பவ தினத்தன்றே வீரப்பன் சுட்டுகொல்லப்பட்ட இடத்திற்கு நேரில் சென்று தொடங்கினார். இதனைத் தொடர்ந்து சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் ஆர்.டி.ஓ முன் சாட்சியம் அளிக்கலாம் என அறிவிக்கப்பட்டது இதன்படி கடந்த முதலாம் திகதி தொடங்கிய விசாரணையின் போது வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி நேரில் ஆஜராகி சுமார் 4 மணி நேரம் சாட்சியம் அளித்தார்.

இதுவரையிலும் 300 இற்கும் மேற்பட்டோர் சாட்சியம் அளித்துள்ளனர். இவர்களில் யாரும் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கிடையாது. வீரப்பனால் பாதிக்கப்பட்டவர்கள் என மனித உரிமை கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்டவர்களும் ஆவர்.

இதனால் ஆர்.டி.ஓ விசாரணை திசைமாறிச் செல்வதாகக் கூறப்படுகிறது. தர்மபுரி ஆர்.டி.ஓ. தனது விசாரணை அறிக்கையை ஒரு மாதத்திற்குள் அரசுக்கு தாக்கல் செய்வதாகத் தெரிவித்திருந்தார் ஆனால் வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்டு ஒரு மாதம் நிறைவடைந்து விட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவ இடத்தில் இருந்த அதிரடிப்படை வீரர்களில் யாரும் இதுவரை சாட்சியம் அளிக்க வரவில்லை. எனவே அவர்களில் 42 பேருக்கு அழைப்பாணை அனுப்ப உள்ளதாகவும்; இதற்கான பணிகள் நடந்து வருவதாகவும் ஆர்.டி.ஓ பிர காசம் தெரிவித்தார்.

எனவே வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் ஆர்.டி.ஓ விசாரணை நீடிக்கும் எனத் தெரிகிறது.

# இந்திரா காந்திக்கு அஞ்சலி

புதுடில்லி முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 87 ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி டில்லியில் உள்ள அவரது சமாதியில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவிசோனியா, மத்திய அமைச்சர்கள் நட்வர் சிங், சுனில்தத் உட்படப்பலரும்மலர் தூவி அஞ்சலிசெலுத்தினர்.


# பயணியர் பேருந்துப்பணி

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### கிளிநொச்சி – புளியங்குளம்

மேற்படி பேருந்துப்பணி 26.11.2004ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்குக்கு அமைவாக நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு:-

**கிளிநொச்சி – புளியங்குளம்**

| கிளிநொச்சி | முருகண்டி | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|
| காலை 05.30 | 05.50 - 06.00 | 06.40 | 07.15 |

**புளியங்குளம் – கிளிநொச்சி**

| புளியங்குளம் | மாங்குளம் | முருகண்டி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| காலை 07.45 | 08.20 | 09.00 - 09.10 | 09.30 |

முகாமையாளர், பேருந்துப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
கிளிநொச்சி.

# பேருந்துப்பணி

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### பெரியமடு – உயிலங்குளம்

மேற்படி பேருந்துப்பணி பாடசாலை மாணவர், ஆசிரியர் நலன் கருதி26.11.2004ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்குக்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு:-

**பெரியமடு– உயிலங்குளம்**

| பெரியமடு | பெரியமடுமகாவித்தியாலயம் | சன்னார் | பள்ளமடு | விடத்தல்தீவு | ஆண்டாங்குளம் | உயிலங்குளம் |
|---|---|---|---|---|---|---|
| காலை 07.30 | 08.00 | 08.15 | 08.45 | 08.50 | 09.15 | 09.30 |

**உயிலங்குளம் – பெரியமடு**

| உயிலங்குளம் | ஆண்டாங்குளம் | விடத்தல்தீவு | பள்ளமடு | சன்னார் | பெரியமடுமகாவித்தியாலயம் | பெரியமடு |
|---|---|---|---|---|---|---|
| பகல் - 12.45 | 01.00 | 01.25 | 01.30 | 02.00 | 02.15 | 02.45 |

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
கிளிநொச்சி.

(சி-10628)

## அவுஸ்திரேலியாவின் ஷேன்வோர்னும் தவறாகப் பந்து வீசுவதாக சர்ச்சை



அவுஸ்திரேலியாவின் ஷேன்வோர்ன் தவறாக பந்துவீசுவதாக புதிய சர்ச்சையைக் கிளப்பியுள்ளார் பாகிஸ்தான் நடுவர் அலீந்தர். நியூசிலாந்துக்கு எதிரான நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டத்தில், ஓரமை அவுட் செய்வதற்காக வோர்ன் 'லெக்' திசையில் பந்து வீசினார். இந்தப் பந்துகளை ஓரம் அதே திசையில் தட்டி விட்டு ஓட்டம் எடுத்த போதிலும், நடுவர் அலீம் 'வையிட்' என அறிவித்தார். காரணம் அவை தவறான முறையில் வீசப்பட்ட பந்துகள் எனவும் விளக்கம்அளித்துள்ளார்.

இதனால் கடுப்பான வோர்ன் போட்டி முடிந்த பின் அளித்த பேட்டியில் "ஓரம் விக்கெட்டைக் கைப்பற்றுவதற்காக அதிக சுழற்சியுடன் "லெக்" திசையில் பந்து வீசினேன். இதைப் போய் நடுவர் 'தவறான பந்து' என கூறி 'வைட்' கொடுத்தார். நடுவரின் இந்த முடிவு மிகவும் ஏமாற்றமளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

மேலும் இந்தப் போட்டியில் அலீந்தருக்குப் பதிலாக வேறொரு நல்ல நடுவரை நியமிக்கும் படியும் அவர் கூறினார். வோர்ன் தற்போது 545 விக்கெட்டுகளுடன் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளார்.

## இந்தியாவிற்கு சாதகமான நிலை இருந்தாலும் போராடும் திறன் அணிக்கு உண்டு - ஸ்மித்



அனுபவமில்லாத அணியாக இருந்தாலும், இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் கடுமையான போட்டியை அளிக்கும் திறன் தமது அணிக்கு உள்ளது என தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரேம் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இத்தொடர் ஆரம்பிக்கும் நிலையில், இந்தியாவிற்கு சாதகமான நிலை நிலவுவதை அவர் ஒப்புக் கொண்டார்.

இந்தியா மாதிரியான பலம் வாய்ந்த அணியை எதிர்கொள்ளத் துடிக்கும் இளம் ரத்தங்கள் (வீரர்கள்) அணியில் நிறையப் பேர் உள்ளனர். சாதிக்க வேண்டும் என்ற மனப்பான்மை அவர்களிடம் உள்ளது. இதனால், இத்தொடர் இளம் வீரர்களுக்கு நல்ல அனுபவத்தைக் கொடுக்கும்.

ஒவ்வொரு தொடருமே சவால் நிறைந்ததுதான் என்றாலும், இந்தியாவில் தொடரை வெல்ல வேண்டும் என்பது வீரர்களின் தனிப்பட்ட ஆசையும்கூட. ஆதலால், இத்தொடரில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. இந்தியாவை வெல்ல என்ன செய்ய வேண்டும். எப்படி ஆட வேண்டும் உள்ளிட்டவைகளை எல்லாம் கலந்தாலோசித்துள்ளோம். அத்துடன் இத்தொடருக்காக தென்னாபிரிக்காவில் பயிற்சி முகாமில் ஈடுபட்டோம் என்றார் ஸ்மித்.

## மத்தியஸ்தரின் தீர்ப்பை அவமதித்த ஞானமுருகன் வி.கழகம் வெளியேற்றம்

மத்தியஸ்தரின் தீர்ப்புக்கு எதிராக செயற்பட முனைந்த சுன்னாகம் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் மைதானத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டும் உள்ளது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற கால் பந்தாட்ட சுற்றுப்போட்டியின் போது விளையாட்டு விதிகளுக்கு எதிர்மாறாக விளையாட முயன்ற சிரேஷ்ட வீரர் ஒருவருக்கு சிவப்பு அட்டை காட்டி அவரை வெளியேறும்படி மத்தியஸ்தர் வேண்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த ஞானமுருகன் விளையாட்டுக்கழக ஏனைய வீரர்களும் மத்தியஸ்தருடன் வாய்த்தர்க்கம் செய்யமுயன்றதுடன் சிவப்பு அட்டையையும் பறிக்க முயன்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இவ்அணியின் விளையாட்டை இடைநிறுத்தியதுடன் மைதானத்தில் நின்ற வீரர்களையும் வெளியேற்றி விளையாட்டையும் அத்துடன் குறிப்பிட்ட நாளில் முடித்துக்கொண்டனர்.

ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த குழப்பம் விளைவித்த வீரர்களின் மீது ஒழுக்காற்று குழுவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுமுள்ளனர். (41)

### பிரிஸ்பேன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

## கிளார்க், கில்கிறிஸ்ட் அபார ஆட்டம் அவுஸ். அணி வலுவான நிலையில்

அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், அவுஸ்திரேலியா அணிக்கும் இடையில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கிளார்க், கில்கிறிஸ்டின் அபார ஆட்டத்தால் வலுவான ஓட்ட எண்ணிக்கையை அவுஸ்திரேலிய பெற்றுள்ளது.



அவுஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது.

நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 353 ஓட்டங்கள் குவித்தது. ஜேக்கப்ஓரம் 126 ஓட்டங்களும், சின்கிளையர் 69 ஓட்டங்களும் எடுத்தனர். காஸ்பரோவிச், வோர்ன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.



பின்னர் முதல் இன்னிங்சை விளையாடிய அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் 2ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 197 ஓட்டங்களை எடுத்து இருந்தது. மார்ட்டின் 59 ஓட்டங்களுடனும், கிளார்க் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். நன்றாக ஆடிக்கொண்டிருந்த மார்ட்டின் 70 ஓட்டம் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் இருந்த மைக்கேல் கிளார்க் மிகவும் அபாரமாக விளையாடி சதம் அடித்தார். 148 பந்துகளைச் சந்தித்து அவர் 100 ஓட்டங்களை தொட்டார். கிளார்க்கின் 2ஆவது டெஸ்ட் சதம் இது ஆகும்.

நேற்றைய ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலியா 9 விக்கெட் இழப்பிற்கு 564 ஓட்டம் குவித்திருந்தது. மெக்ராத் 54 ஓட்டங்களுடனும், கிளெஸ்பி 44 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

கிளார்க் 200 பந்துகளில் 21 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 141 ஓட்டங்களுடனும், கில்கிறிஸ்ட் 151 பந்துகளில் 13 பவுண்டரி, 4 சிக்சருடன் 126 ஓட்டங்கள் எடுத்தனர். கிளார்க்கும், கில்கிறிஸ்டும் 6ஆவது விக்கெட்டுக்கு 216 ஓட்டம் எடுத்தது நேற்றைய ஆட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

நியூசிலாந்து தரப்பில் மார்ட்டின், வெட்டோரி ஆகியோர் தலா 4 விக்கெட்டும், மில்ஸ் ஒரு விக்கெட்டும் எடுத்தனர். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## திருமலை மாவட்டத்தில் கால்பந்து, கரப்பந்து போட்டி

மாவீரர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட விளையாட்டுத் துறையினரால் விளையாட்டுப்போட்டிகள் நடை பெறவுள்ளன.

உதைபந்தாட்டம்,கரப்பந்தாட்டம் என்பன மத்கேசர் உள்ளரங்கில் நடைபெறவுள்ள இப்போட்டியில் 30 கழகங்கள் பங்கு கொள்கின்றன. இதில் வெற்றி பெறும் முதலாவது கழகத்திற்கு 10 ஆயிரம் ரூபா பணமும், இரண்டாவது கழகத்திற்கு 5ஆயிரம் ரூபா பணப்பரிசையும் பெறுவதுடன் தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடாத்த வுள்ள கேணல் கிட்டு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண போட்டிகளில் கலந்துகொள்ள வாய்ப்பும் உள்ளது.




## மாவீரர் வெற்றிக்கிண்ண மென்பந்து கிரிக்கெட் போட்டி

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடாத்தப்படும் மாவீரர் நினைவுக்கேடயத்திற்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

கண்டாவளைப்பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வினைத் தொடர்ந்து பூநகரி விநாயகர் விளையாட்டுக்கழகம் கோணாவில் இளந்தளிர் விளையாட்டுக் கழகமும் முதலாவது போட்டியில் கலந்து கெண்டிருந்தன. இதில் பூநகரி விநாயகர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

இரண்டாவது ஆட்டத்தில் பலம் வாய்ந்த நாச்சிக்குடா ஜின்னா அணியினரை இரணைமடு சந்திரன் விளையாட்டுக்கழகம் வெற்றி கண்டது. மூன்றாவது ஆட்டத்தில் கிளிநொச்சி கிருஸ்ணபாரதி அணியின்ரை எதிர்த்து ஸ்கந்தபுரம் ஞானோதயம் அணியினர் விளையாடினர். இப்போட்டி மழைகாரணமாக இடைநிறுத்தப்பட்டது. போட்டிகள் தொடர்ந்து இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளுக்கு நடுவர்களாக தனபாலன், சசி, சோதி, றெஜி ஆகியோர்கடமையாற்றினர்.

## மாவீரர் வெற்றிக்கிண்ண கால்பந்துப்போட்டி இன்றும் பல போட்டிகள் நடைபெறுகின்றன

மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான கால்பந்து போட்டியின் கரைச்சிக் கோட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான கால்பந்துப் போட்டி நேற்று ஆரம்பமானது.

மருதநகர் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் காலை முதல் மாலை வரை நடைபெற்ற முதல் சுற்றுப் போட்டியில் கோணாவில் இளந்தளிர் அணியை எதிர்த்தாடிய வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையிலும், பிரைக்சன் அணியை எதிர்த்தாடிய ஸ்கந்தா அணி 2-0 என்ற கோல் எண்ணிக்கையிலும், வட்டக்கச்சி இளந்தளிர் அணியை எதிர்த்தாடிய உதயதாரகை அணி தண்ட உதை மூலமும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின. இதனைவிட மாலதி அணி சந்திரோதயா அணி, உருத்திரபுரம் அணி என்பன போட்டியின்றி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின.

இன்றைய போட்டியில் மாலதி அணியை எதிர்த்து சந்ரோதயா அணியும், லக்கிஸ்ரார் அணியை எதிர்த்து ஸ்கந்தா அணியும், உழவர் ஒன்றிய அணியை எதிர்த்து உதயதாரகை அணியும், உருத்திரபுரம் அணியை எதிர்த்து திருநகர் அணியும் மோதவுள்ளன.

## இதுவரை தென்னாபிரிக்கா—இந்தியா

இந்திய-தென்னாபிரிக்க அணிகள் இது வரை 14 போட்டிகளில் விளையாடியுள்ளன. அதில் தென்னாபிரிக்க அணியே அதிகமான போட்டிகளில் வெற்றி கண்டுள்ளது.

அந்த அணி 7 போட்டிகளிலும், 2 போட்டிகளில் இந்தியாவும் வெற்றி பெற்றுள்ளன. 5 போட்டிகள் சமநிலையில் முடிந்துள்ளன.

5 போட்டிகள் இந்தியாவிலும், 9 போட்டிகள் தென்னாபிரிக்காவிலும் நடந்துள்ளன.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற போட்டிகளில் ஒன்றில்கூட இந்தியா வென்றதில்லை. அதே சமயம் 4 போட்டிகளில் தென்னாபிரிக்கா வென்றது. 5 போட்டிகள் சமநிலையில் முடிந்தன.

இந்தியாவில் நடைபெற்ற 5 போட்டிகளில் 2இல் இந்தியாவும், 3இல் தென்னாபிரிக்காவும் வெற்றி பெற்றுள்ளன.


## மைதானம் அமைக்க சீனா நிதி உதவி

உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகளுக்கான புதிய மைதானம் அமைப்பதற்கு சீனா நிதி உதவி அளிக்கவுள்ளது.

2007 உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகளை மேற்கிந்தியத் தீவு ஏற்று நடத்த உள்ளது. இந்தப் போட்டிகளை நடத்துவதற்காக பல நாடுகளில் இருந்தும் நிதி உதவியை எதிர்பார்க்கிறது மேற்கிந்தியத்தீவு. கிரிக்கெட் சபை பல தீவுகள் சேர்ந்த அமைப்பு என்பதால் மிகப்பெரிய தொடரை ஏற்று நடத்துவதில் பொருளாதார ரீதியாக சில சிக்கல்கள் உள்ளன. அமெரிக்கா தங்களது முழு ஒத்துழைப்பையும் தருவதாக ஏற்கனவே கூறிவிட்டது. சில போட்டிகளை அமெரிக்காவில் நடத்தவும் உத்தேசித்து உள்ளனர்.உலககோப்பை தொடருக்காக புதிய மைதானங்கள் அமைக்க, சீனா கடந்த ஆண்டு ரூ.100 கோடி வரை தருவதாக தெரிவித்திருந்தது. தற்போது மேலும் ரூ.13 கோடி கூடுதலாக தருவதாக அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் சபை மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளது.

### கான்பூர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

## தென்னாபிரிக்கா 230/4 விக்கெட்





இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கான்பூரில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்க அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் கிப்ஸ் பங்குபற்றாத நிலையில் அவருக்குப் பதிலாக ஆரம்பத் துடுப்பாட்டக்காரராக களமிறங்கிய அன்ரூகோல் ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களையும், டிப்பன்னர் 44 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் வீழ்த்தப்பட்ட நான்கு விக்கெட்டுக்களையும் அனில் கும்ளே கைப்பற்றினார். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

## தென்னாபிரிக்க அணி எப்போதுமே சிறந்த அணி இந்திய வீரர்களுக்கு கங்குலி எச்சரிக்கை




தென்னாபிரிக்க அணியை அனுபவமற்ற இளம் வீரர்கள் கொண்ட அணி என்று குறைவாக எடைபோட்டுவிட வேண்டாம் என்று இந்திய வீரர்களுக்கு அணித் தலைவர் சௌரவ் கங்குலி எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்தியா தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையேயான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள கான்பூரில் நேற்றுத் தொடங்கியது.

நேற்றுமுன்தினம் கான்பூரில் நிருபர்களைச் சந்தித்த அணித்தலைவர் கங்குலி மேற்கண்டவாறு இந்திய வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். அவர் மேலும் கூறியதாவது; தென்னாபிரிக்க அணி எப்போதுமே ஒரு தரம்மிக்க அணியாகும். அதனை அனுபவமற்ற அணி என்று எடைபோடுவது மிகப்பெரிய தவறாகும் என்றும் கங்குலி கூறினார்.

தென்னாபிரிக்க அணி எப்போதுமே சிறந்த அணியாகும். தற்போதைய அணி கடந்த கால அணியைப் போன்று அனுபவம் உடையது அல்ல. இருந்தபோதிலும் அந்த அணி மிகுந்த வேட்கையுடன் இங்கு வந்துள்ளது. அவர்களிடம் ஏராளமான திறமை உள்ளது. எனவே அந்த அணியை குறைத்து மதிப்பிட வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார்.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இந்திய அணி தோல்வியடைந்தது ஏமாற்றமளிக்கிறது. இதிலிருந்து மீண்டும் வெற்றிபெற இந்திய அணிக்கு இந்தத்தொடர் நல்ல வாய்ப்பு என்றும் அவர் குறிப்பிட்டார்.

### சிந்தனைக்கு



மனித ஆன்மாவின் ஆழமான அபிலாசையாகவே மனிதனிடம் சுந்திர தாகம் பிறக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 21-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## வேறுபாடு இல்லை!

சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காமைக்கு ஆளும் கூட்டணிக்குள் பலமான சக்தியாகவுள்ள ஜே.வி.பி. காட்டிவரும் தீவிரமான எதிர்ப்பே காரணம் எனப் பரவலானதொரு அபிப்பிராயம் உண்டு. இது முற்றிலுமாக நிராகரிக்கப்படக் கூடியதொன்றும் அல்ல.

அண்மையில் கூட சனாதிபதி சந்திரிகா குமரதுங்க விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் உடனடியாகவே தமது அமைச்சர்கள் இராஜினாமச் செய்து விடுவார்கள் என அரசாங்கத்திற்கு ஜே.வி.பி. எச்சரித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

அரசின் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்பான ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் எச்சரிக்கைகள் மட்டும் தான் சனாதிபதி சந்திரிகா குமரதுங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்குத் தடைக்கல்லாக இருக்கின்றதா எனில் அது ஏற்புடையவாதம் என்று கொள்வதற்கு இல்லை? இதற்கு சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளே ஆதாரங்களாகக் கொள்ளத்தக்கவையாக வுள்ளன.

ஜே.வி.பி சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தமது தீவிர எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்ற போதும் சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசாங்கத்திற்குள் முரண்பாடு எதுவும் இல்லை என்றே சாதிக்க முனைகின்றார்.

இறுதியாக அவர் சென்னையில் இருந்து வெளியாகும் இந்து ஆங்கில நாளிதழுக்கு வழங்கிய பேட்டியில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தமது அரசாங்கத்திற்குள் முரண்பாடு / பிரிவினை எதுவும் கிடையாது எனத் தெரிவித்துள்ளதோடு,அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை களுக்கு தயார் எனவும் ஜே.வி.பி.யைப் படிப்படியாக சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வரமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகாவின் இக்கூற்றுக்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுவதற்கு ஜே.வி.பி முட்டுக்கட்டையாகவுள்ளது என்பதை நிரகாரிப்பதாகவுள்ளது. அவ்வாறாயின் சனாதிபதி சந்திரிகா பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்காது ஏன்?

ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச அண்மையில் பி.பி.ஸி சிங்களச் செவ்விக்கு வழங்கிய பேட்டியில் சனாதிபதி சந்திரிகா நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸனுடனான சந்திப்பின் போது சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க தயார் என ஏன் கூறவில்லை எனக் கேட்டுள்ளார்.

அதாவது ஜே.வி.பி.யின் எதிர்ப்பைக் கண்டு சனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காமல் இல்லை எனில் சனாதிபதி சந்திரிகா சுயவிருப்பின் பேரிலேயே சமாதானப் பேச்சுக்களை முன்னேடுக்காமல் உள்ளார். என்றே அர்த்தம் கொள்ள முடியும்.

அவ்வாறு இல்லாது சனாதிபதி சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னேடுப்பதற்கு ஜே.வி.பி. முட்டுக்கட்டையாக இருப்பின் அது தொடர்பான அறிவிப்பை அவர் வெளியிட்டிருத்தல் வேண்டும். அதாவது சனாதிபதிசந்திரிகா ஜே.வி.பி. சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தயாரில்லை எனின் அதனை வெளியுலகிற்குக் கூற வேண்டும். அதை விடுத்து ஜே.வி.பி சமாதானப் பேச்சு வார்த்தைக்கு தடை இல்லை எனச் சாதிக்க முன்வைராததால் சமாதானப் பேச்சுவார்த்தை தாமதத்திற்கான பொறுப்பைச் சனாதிபதி ஏற்க வேண்டும்.

அதாவது சனாதிபதி சந்திரிகா, -ஜே.வி.பி விரும்புகிறதோ இல்லையோ சமாதான முயற்சிகளில் உளப்பூர்வமான ஈடுபாடு காட்டவில்லை என்பதே நிதர்சனமாகும். சமாதானத்திற்கு பதில் யுத்தத்தையே அவர் விரும்புகின்றார். ஆனால் தற்போதை சூழ் நிலையில் அவரால் யுத்தம் குறித்துப் பேச முடியவில்லை என்பதே யதார்த்த பூர்வமானதாகும்.

இந்த வகையில் சனாதிபதிக்கும்- ஜே.வி.பி.க்கும் இடையில் உள்ள ஒரே வேறுபாடு சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிராக வெளிப்படையாகப் பேசத் தயங்குகிறார். ஜே.வி.பி. சமாதானத்திற்கு எதிராக வெளிப்படையாகப் பேசுவதற்குத் தயங்க வில்லை என்பதே.

சனாதிபதி சந்திரிகா அவ்வாறு பேச்த்தயங்குவதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. அதாவது சனாதிபதி சந்திரிகா ஆட்சிக்குப் பெறுப்பாக உள்ளார். ஜே.வி.பி.க்கோ பொறுப்புக் கூற வேண்டிய தேவை இல்லை. சந்திரிகாவும் ஜே.வி.பி. போன்றிருந்தால் இதேபோன்றே பேசியிருப்பார் இதில் எவருமே சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

### தமிழீழ மாவீரர் நாள் - 2004

# மாவீரர் தம் ஈகமும், வீரமும் என்றுமே போற்றத்தக்கவை

தமது இன்னுயிரை ஈந்த விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும், ஈகங்களும், அருஞ் செயல்களும் மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும், குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் எமது தலைவரின் எண்ணத்திலிருந்து உருவானது தான் தமிழீழ மாவீரர் நாள்.

தமிழீழ விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து, நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்து விட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரரை யும் தனித்தனியாகஆண்டு தோறும் அவரவர் நினைவு நாட்களில் நினைவு கூர இயாலாது என்ற நிலை யில் அனைவரையும் ஒரே நாளில் நினைவு கூரத்தக்கதாக தமிழீழ விடுதலைப் போரில் முதற் களச் சாவடைந்த இயக்க வீரன் லெப்ரினன்ட் சங்கரின் (சத்தியநாதன்) நினைவு நாளான நவம்பர் 27ஆம் நாளைப் பொதுவான நாளாகத் தேர்ந் தெடுத்த எமது தலைவர் 1989ஆம் ஆண்டில் தமிழீழ மாவீரர் நாளை அறிவித்தார்.

விடுதலைப்போராட்டத்தில் உலகம் வியக்கும் வகையிலே புதிய வரலாறு படைத்து புதுமை சேர்த்து நிற்கும் எமது தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் மண்மீட்புப் போரிலே பல வெற்றிகளை குவித்துவரும் அதேநேரம், நாட்டை எல்லாத் துறைகளிலும் கட்டியெழுப்பு வதற் கான திட்டங்களைத் தீட்டி வழிகாட்டி இயங்கி வருவதோடு, தூய்மையான தேசிய விடுதலைப் போரை வீறோடு நடாத்தி வீரச்சாவைத் தழுவிய மாவீரர் களைப் போற்றி நினைவில் நிறுத்தவும், அவர் களது பெற்றோரும், குடும்பத்தினரும் அல்லலுறும் நிலையை மாற்றவுமெனப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றார்.

தமிழீழ மாவீரர் பணிமனை

### சிறிலங்கா பாராளுமன்றத்தில்

# கூட்டமைப்பு பா.உ சம்பந்தன் உரையாற்ற ஜே.வி.பியினர் தடை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் நேற்றுப் பிற்பகல் பாராளுமன்றத்தில் வல்வெட்டித் துறை சம்பவம் குறித்து விசேட உரையொன்றை ஆற்ற முற்பட்ட வேளையில் ஏற்பட்ட அமைதி யின்மை காரணமாக சபையின் நடவடிக்கை 10 நிமிடத்துக்கு ஒத்திவைக்கப்படடது.

அமைச்சர் சி.பி. ரத்னாயக்க வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் ஆற்றிய உரையையடுத்து இரா. சம்பந்தன் விசேட உரை யொன்றை ஆற்றுவதற்காக எழுந்து நின்ற வேளை குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நிலையியற் கட்டளைச் சட்டத் தின்படி உறுப்பினர் சம்பந்தன் உரையாற்ற முடியாதென வாதிட் டுள்ளார்.

அவ்வேளை, சபைக்கு தலைமை தாங்கிய ஐக்கிய தேசியக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கருணாதிலக சபையின் நடவ டிக்கையை ஒத்தி வைத்துள்ளார்.

# இந்நாட்டின் வளங்களை சிங்கள மக்கள் அனுபவிக்கவே வரவு-செலவுத் திட்டம் உதவும்

### -தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பா.உ. கஜேந்திரன்

நடைபெற்று முடிந்த வரவு-செலவுத் திட்ட யோசனைகள் இந்நாட்டிலுள்ள வளங்களைப் பெரும்பான்மை சிங்கள மக்கள் ஏகபோகமாக அனுபவிக்கும் உரிமையே வழங்குவதன்றி தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திரன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டுப் பாராளுமன்றம் பெரும்பான்மை பௌத்த மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதால் பாராளுமன்றமும் சிங்கள மக்களுமே நாட்டின் வளங்கள் பற்றியும், முதலீடுகள் பற்றியும் முடிவு எடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பதாகவும் கூறிய அவர் தேசிய வளங்களை அனுபவிக்கும் உரிமை தமிழ் மக்களாகிய எமக்கும் உள்ளது என்று தெரிவித்தார். அத்துடன் இவற்றை அனுபவிக்கும் உரிமையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத் துடனேயே விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக சபை பற்றிய பிரேரணையை முன்வைத்திருக் கின்றனர் என்றார்.

# 9 மணி நேர சேவைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த ஐ.தே.க.திட்டம்

### வழக்குத் தாக்கல் செய்யவும் முடிவு

அரச ஊழியர்களின் சேவை நேரத்தை 9 மணித்தியாலங்களாக நடைமுறைப்படுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்ட மொன்றை நடத்தப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக் கின்றது.

இந்தப் புதிய முறை நடை முறைப்படுத்தப்படுமாயின் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

தேசிய ஊழியர் சங்க தலைமையத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே இவ்வாறு தெரி வித்தார்.

இந்த நடவடிக்கைக்கு எமது எதிர்ப்பைத் தெரிவித்தது மாத்திரமன்றி இதனை மாற்றும் வரை அரசாங்கத்திற்கெதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற் கொள்வோம் என்றும் இந்த விடயம் அடங்கலாக வரவு-செலவுத் திட்டம் நிறை வேற றப்படுமானால், இதற்கெதி ராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பது குறித்து தமது சட்டத்தரணி களுடன் கலந்துரையாடி வருவதாக வும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோதமாக 48 லட்சம் சம்பாதித்த சிறிலங்கா இராணுவக் கப்டன் கைது

சிறிலங்கா இராணுவத்தில் கடமையாற்றிய கப்டன் தர அதிகாரி ஒருவர் சட்டவிரோதமான முறையில் 48 லட்சம் ரூபாவை சம்பாதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு 25 ஆயிரம் ரூபா ரொக்கம் மற்றும் 25 ஆயிரம் சரீரப் பிணையிலும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 1973ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்த நெல்சன் சியம்பளாபிட்டிய என்பவர் 1998 முதல் 2000 ஆண்டு வரை லஞ்ச ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு மேற்படி 48 லட்சம் ரூபாவை பதுக்கி வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

1998ஆம் ஆண்டு இவர் அநுராதபுரம் மாவட்டத்தில் சேனபுர இராணுவ முகாமில் ஊனமுற்றோர் நலன்புரி நிலையத்தில் பொறுப்பாளராகக் கடமையாற்றியவர் என்று விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

## யாழ். குடாநாட்டில் நேற்று நடைபெற்ற ஹர்த்தாலின்போது...







# வெகு சிறப்பாக நடைபெற்ற புலிகளின் குரல் ஆண்டு நிறைவு விழா

புலிகளின் குரல் வானொலியின் 14ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்று புலிகளின் குரல் வானொலியின் ஒன்று கூடல் மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் புலிகளின் குரல் வானொலியின் துணைப் பொறுப்பாளர் செயல்வீரன் அவர்களின், தலைமையில் அங்கு பணியாற்றும் பணியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கள் அவர்களும், தமிழீழ ஊடக இணைப்புப் பொறுப்பாளர் நரேஸ் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தொடர்ந்து மாலை 4.00 மணிக்கு ஆரம்பமான 14ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் அவர்கள் ஏற்றிவைக்க, ஈகச்சுடரினை போராளியும், இலக்கியப் படைப்பாளியுமான தமிழ்க்கவி அவர்கள் ஏற்றினார். தொடர்ந்து பிரின்சியாவின் வரவேற்பு நடனத்தினையடுத்து புலிகளின் குரல் வானொலியின் முதன்மை செய்தியாசிரியர் தி.தவபாலன் வரவேற்புரையினை நிகழ்த்த, செயல்வீரன் அவர்கள் தலைமையுரையினை நிகழ்த்தினார். தொடர்ந்து அனைத்துலகத் தொடர்பகப் போராளி சோமஸ் கந்தன் புலிகளின் குரலும் ஊடகமும் என்ற தலைப்பில் ஆய்வுரையினை வழங்க சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து தமிழ்ழ அரசியல் துறைப்பொறுப்பாளர் அவர்கள் புலிகளின் குரலுக்கு வழங்கிய வாழ்த்துச்செய்தியினை அறிவிப்பாளர் ரட்னா வழங்கினார். அடுத்து புலிகளின் குரலினால் நடாத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டிய படைப்பாளிகளுக்கு தமிழீழ காவல்துறை பொறுப்பாளர்பா.நடேசன் அவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவித்தார். சிறப்பு நிகழ்வாக புலிகளின் குரல் அறிவிப்பாளர் பொன்காந்தனின் தலைமையில் கவியரங்கம் இடம்பெற்றது.

(ச,கு)

### தேசியத்...

பெருமிதத்துக்குமுரிய ஒன்று இன்றைய உலகின் மூலை முடுக்கெல்லாம் குடும்பம், பாடசாலை பல்கலைக்கழகம் என ஒவ்வொருஅம்சங்களிலும் ஊடகங்கள் தமது கருத்துப் பரப்பலின் ஊடாக பெரும் தாக்கங்களைச் செலுத்துகின்றன.

இன்று உலகின் உண்மைகள்மிகச் சாதுரியமாகத் திரிவுப்படுத்தப்பட்டு சக்தி வாய்ந்த செய்தி ஊடகங்களினால் பின்னப்பட்ட கருத்துவலைப் பின்னல்களுக்குள் இன்றைய மானிட சமூகம் சிக்குப்பட்டு நிற்கின்றது. இச்செய்தி ஊடகங்களின் உண்மைத்தன்மை என்பது தத்தமது தேச பூகோள நலன்களினடிப்படையிலேயே மக்களின் மனங்களைச் சென்றடைகின்றன.

இவ்வாறானதோர் புறச் சூழலில் விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் ஓர் தேசிய இனம் என்ற அடிப்படையில் நாம் செய்தி ஊடகத்துறையில் இன்றைய அதன் வளர்ச்சிப்போக்குகளை உள்வாங்கிக் கொண்டவர்களாக சமூக அரசியல் உலகில் அவற்றின் தாக்கங்களை விளங்கிக்கொண்டவர்களாக இருப்பது மிக அவசியம் இன்றைய உலகின் நவீன தொழிநுட்ப துறைசார்ந்த ஊடக வளர்ச்சிகளைக்கொண்டமைந்த எமக்கென்ற தனித்துவமான செய்தி ஊடகங்களை நாம் கட்டியெழுப்புவது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

சர்வதேச மட்டங்களிலும், தேசிய மட்டங்களிலும் செய்தி ஊடகங்களின் தாக்கங்கள் பெரும் அரசியல் இராஜதந்திர மாற்றங்களுக்கு நகர்வுகளுக்கு காரணமாக அமைந்து விடுகிறன்றன. கடந்தகால இன்றைய சர்வதேச அரசியல் உலகில் நிகழ்ந்த நிகழ்ந்துகொண்டிருக்கும் சம்பவங்கள் இதனை எமக்கு தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. இன்று எமது விடுதலைப் போராட்டத்தில் எமது தேசத்தின் உண்மை நிலையை வெளிக்கொண்டு செல்லும் ஓர் தேசிய ஊடகமாக வளர்ச்சிபெற்றிருக்கும் புலிகளின் குரல் வானொலி இவ்வளர்ச்சியுடன் மட்டும் நின்றுகொள்ளாது மென்மேலும் வளர்ந்து செல்லவேண்டும்.இத்துறையில் ஏற்பட்டுவரும் நவீன மாற்றங்களை விளங்கிக்கொண்டு அதனை உள்வாங்கி புலிகளின் குரல் வானொலியை வளர்த்துச் செல்லவேண்டியது எம் எல்லோரினதும் கடமையாகும். எமது இத்தேசிய வானொலியை வளர்த்தெடுப்பதில் அதில் பல்வேறு பிரிவுகளிலும் அயராது பாடுபட்டவரும் அதன் ஊழியர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

எமது தேசத்தினதும், மக்களினதும் அரசியல் வாழ்வியற் பிரச்சினைகளை செய்திகள் காத்திரமான நிகழ்ச்சிகளூடாக கொண்டுவரும் புலிகளின் குரல் வானொலி பரந்துபட்டளவில் தமிழ் மக்களின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. இன்று ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் கூட இணையத்தளங்களில் காணப்படும் புலிகளின் குரல் செய்தி நிகழ்ச்சி ஒலிபரப்புகளை கேட்டுவருகின்றனர். பதின்நான்காவது அகவையை நிறைவு செய்யும் புலிகளின்குரல் வானொலி இன்றைய ஊடகத்துறையின் நவீன மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு மென்மேலும் வளர்ந்து எமது தேசத்தின் எதிர்பார்புகளைப் பூர்த்திசெய்ய எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பூரிப்பும், நிறைவுமடைகிறேன் என வாழ்த்தியுள்ளார்.

# மேல் நீதிமன்ற நீதிபதி கொலையில் அரசாங்கம் சம்பந்தப்பட்டிருக்கலாம்

## சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலையில் அரசாங்கம் சம்பந்தப்பட்டிருக்கலாம் என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் ஒரு மணித்தியாலமாக நீதிபதியின் தொலைபேசி துண்டிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அவருக்கான பொலிசாரின் பாதுகாப்பும் நீக்கப்பட்டிருந்தது. எனவே, இது உயர் மட்டத்தில் திட்டமிட்டப்பட்ட கொலை என சட்டத்தரணிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். நேற்று கொழும்பில் ஊடக மாநாட்டை கூட்டிய அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்த கொலைக்கும் சம்பந்தம் இருப்பதற்கான வாய்ப்பில்லை எனக்கூறிய அவர்கள் குறிப்பிட்ட நீதிபதி பிந்துனுவெவ தமிழ் இளைஞர்கள் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட பொலிசாருக்கும் இவரே மரணதண்டனை விதிதததை நினைவூட்டியுள்ளனர்.

(32)

### வீதி...

அனுமதிக்கப்பட்டதுடன் பின்னர் அவர் யாழ் போதனா மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீவிரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார் .

(28,33,27)

### அப்பாவி...

நாளாகநேற்றும் பதற்றமான சூழலே தொடர்ந்தும் நிலவியது. வல்வெட்டித்துறையின் ஆதிகோவிலடி முதல் பருத்தித்துறை வரையான கரையோரப் பகுதியெங்கும் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. கொல்லப்பட்டவர்களினது உடல் வைக்கப்பட்டுள்ள வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு பருத்தித்துறை நீதவான் க.அரியநாயகம் நேரடியாகச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். அவரது வருகையினை முன்னிட்டு வீதித்தடையினை விலக்கிக்கொண்ட பொது மக்கள் அவர் சம்பவம் இடம் பெற்ற,வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி மைதானத்தில் சென்று திரும்பியதையடுத்து மீண்டும் வீதித்தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

இதேவேளை வைத்திய சாலையின் சூழலில் குவிக்கப்பட்டிருந்த படையினரும்,பொலிசாரும் கடும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். குறித்த வைத்தியசாலையின் முன்றலில் மேலதிக படையினரையோ பொலிசாரையோ வரவோ வெளியேறவோ அனுமதிக்கவில்லை. தடையை மீறி வந்த பொலிஸ் வாகனமொன்று விரட்டியடிக்கப்பட்டது. இதனிடையே நேற்று நண்பகல் 1.30 மணியளவில் உயிரிழந்த இளைஞர்கள் இருவரினதும் உடல்கள் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டன.

(33, 27,28, 41)

### தற்போதைய...

தாவது;

19.11.2004அன்று வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அப்பாவி மக்கள் மீதான கொடூரக் கொலைச் செயலானது மோசமான சம்பவமாகும். தொடர்ச்சியாகப்பாதிக்கப்பட்ட ஏமாற்றப்பட்ட எமது மக்கள் இன்று இயல்புநிலை பாதிக்கப்பட்டதால் கொதிப்படைந்து சனநாயக வழியில் எதிர்ப்புக்காட்ட முனைவது இயல்பானது.

இச்சம்பவம் நடந்தபகுதி இராணுவமுகாம்களும், காவலரண்களும் நிறைந்து காணப்படும் பகுதியில் நடைபெற்றமையால் சிறிலங்காப் படைத்தரப்பே பொறுப்பேற்க வேண்டும். அதைவிடுத்து மக்களின் இயல்புணர்விற்கு மதிப்பளியாது ஆயுதமுனையில் அச்சுறுத்திஅடக்கமுயலும்போது மக்களின் எதிர்ப்பு நடவடிக்கை இன்னும் வீச்சுப்பெறுவது தவிர்க்க முடியாதது.

மீசாலைப் பகுதியில் சனநாயக வழியிலான எதிர்ப்புப் போராட்டங்களை மக்கள் மேற்கொண்டபோது ஆயுதம் தரித்த படைத் தரப்பினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில். அப்பாவிப் பொதுமகன் ஒருவர் படுகாயப்படுத்தப்பட்டு மருத்துவமனை அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அபாயநிலையில் உள்ளார்.

துப்பாக்கி வேட்டுக்களை மக்கள் மீது தீர்ப்பதால் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. இது மக்களை இன்னும் கோபாவேசப்படுத்தும். இவ்வகையில் நிலைமை கட்டுமீறியபோது நாம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கு முறையீடு செய்ததுடன் நிலைமையைக் கட்டுப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டோம். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக அவர்களது ஆலோசனையுடன் யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைத்தளபதியுடன் நாம் சந்திப்பை யாழ்.ஆயர் இல்லத்தில் மேற்கொண்டோம். தொடர்ந்து இவ்வாறான சம்பவங்கள் நடக்க இடமளிக்கக்கூடாது எனவும் வல்வெட்டித்துறையில் இவ்வாறான சம்பவத்தில் ஈடுபட்டவர்களை நீதி யின் முன் நிறுத்தவேண்டும் எனவும் வலியுறுத்தினோம். நிலைமைகள் எல்லைமீறி விபரீத சம்பவங்களை உருவாக்குவதைத் தடுப்பதற்காக படைத்தரப்பினரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து நிலமையைச் சீராக்குவதற்காகவும் இச்சூழ்நிலையை தொடரவிடாது தவிர்க்கும் முகமாகவும் வரும் மாவீரர் எழுச்சி வாரத்தையும், மாவீரர் நாளையும் அமைதியுடன் முன்னெடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள பரஸ்பர ஒத்துழைப்பை வழங்குவதென முடிவெடுக்கப்பட்டது. எனவே எமது மக்களின் உணர்வுகளைப் நாம் புரிந்துகொண்டு அதற்கு மதிப்பளித்து அமைதி நிலையைப் பேணுமாறு வேண்டுகிறோம். தமிழர்களின் முக்கியத்துவம் வாய்ந்த மாவீரர் எழுச்சி நாள் வாரம் இன்று தொடங்குவதால் அதற்கு மதிப்பளித்து போக்குவரத்துத் தடைகளை அகற்றி அமைதியைப் பேணுமாறு வேண்டிநிற்கிறோம்.

### காயமடை...

வழங்கி அவர் அதனை அணிந்த பின் அவரைத் தமது படைத்துறை வாகனத்தில்ஏற்றி அழைத்துச் சென்றுள்ளனர். வைத்தியசாலை விதிமுறைகளை மதிக்காது படையினர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவரைத் தம்முடன் அழைத்துச்சென்றமை குறித்து வைத்திய சாலை அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இது மேற்படி கொலைச்சம்பவம் தொடர்பான ஆதாரங்களை திசைதிருப்பி சர்ச்சைகளை ஏற்படுத்தும் முறையற்ற செயல் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(33, 27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.